பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 20 சனிக்கிழமை (04.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :97

# சிவில் நிர்வாகத்தில் படைகளின் தலையீட்டை கண்டித்து திங்களன்று மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்4

தமிழ் மக்களின் சிவில் நடவடிக்கைகளில் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி தலையிடுவதை உடன் நிறுத்தவேண்டும் என்று கோரியும், அவரது தலையீட்டைக்கண்டித்தும் -

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை வகுப்புகளைப் பகிஷ்கரிக்க விருக்கின்றனர்.

இது தொடர்பான அழைப்பை யாழ். மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் விடுத்துள்ளது.

அந்த அமையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்கள் மீதும் தமிழ் மாணவர்கள் மீதும் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவமும் யாழ்.மாவட்ட ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத் தளபதியும் அழுத்தங்களையும் தாக்குதல்களையும் மேற்கொள்வதை உடன் நிறுத்த வேண்டும்.

குறிப்பாக, யுத்தம் மூலம் தமிழ் மக்களையும் தமிழ் மாணவர்களையும் அழித்தொழித்த ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவம் இன்று மக்கள் மீதும், தமிழ் மாணவர்கள் மீதும், தமிழ் கல்வியியலாளர்கள் மீதும் உளவியல் ரீதியான யுத்தத்தைத் தொடுத்துவருகின்றது.

விசேடமாக தமது (16ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டின் இறைமையை விடுதலைப் புலிகளிடம் அரசு அடகு வைத்துவிட்டது என்கிறது ஜாதிக ஹெல உறுமய

## அரசின் பேச்சுக் குழுத் தலைவர் கூறிய சமாதானங்களை ஏற்க அக்கட்சி மறுப்பு

கொழும்பு,மார்ச்4

“திருத்தப்படவேண்டிய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் திருத்தாமல், புலிகளின் வலையில் சிக்கி, அவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்துகொடுத்து, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அப்படியே நடைமுறைப் படுத்துவதற்கு இணங்கியதன் மூலம் இலங்கை அரசு இந்த நாட்டின் இறைமையைப் புலிகளிடம் அடகுவைத்து பங்கப் பட்டுநிற்கிறது”.

- இவ்வாறு குற்றம் சாட்டுகிறது ஜாதிக ஹெல உறுமய.

அவ்வாறு இல்லையென மறுத்து அரச பேச்சுக்குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா எடுத்துக்கூறிய விளக்கங்களையும் அக்கட்சி ஏற்க மறுத்துள்ளது.

“புலிகளுக்கும் அரசுக்குமிடையில் ஜெனீவாவில் இடம்பெற்ற பேச்சின் ஆரம்பத்தில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கடுமையாக விமர்சித்த அரசு, இறுதியில் அதைத்திருத்தாமல்- புலிகளின் வேண்டுகோளுக்கு இணங்கி - அதை அப்படியே நடைமுறைப்படுத்த உடன்பட்டிருக்கின்றது. இது எமக்கு வியப்பைத் தருகின்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் விவகாரம்: இந்தியப் பிரதமருடன் கருணாநிதி பேசுவரார்

சென்னை,மார்ச்4

ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்திக்கும் போது முதன்மை விடயமாக பேசுவேன் என்று தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

திருச்சிராப்பள்ளியில் நேற்று வெள்ளிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நவீன் திஸநாயக்கவும் ஆளும்தரப்புக்கு ‘பல்டி’?

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான நவீன் திஸநாயக்க உட்பட ஐ.தே.கவின் மூன்று முக்கியஸ்தர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் விரைவில் இணைய உள்ளனரென ஜனாதிபதி செயலக வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாதகலில் மீனவர் படகை மோதி சேதப்படுத்தியது கடற்படை டோறா

### ஆட்சேபித்து கடற்றொழிலாளர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 4

மாதகல் கடற் பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவரின் படகை கடற்படையினரின் டோறாப் படகு நேற்றுமுன்தினம் மோதிச் சேதப்படுத்தியதைக் கண்டித்து வலி. தென்மேற்கு கடற்றொழிலாளர்கள் நேற்றுத் தொடக்கம் தொழில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வலி. தென்மேற்கு மாதகல் சம்பித்துறைக் கடலில் கரையை அண்மித்த பகுதியில் மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர் என்றும் -

இரவு சுமார் பத்துமணியளவில் தந்தையும் மகனுமாக இரு மீனவர்கள் இருந்த படகை கடற்படையினரின் டோறாப்படகு ஒன்று மோதிச் சேதப்படுத்தியது என்றும் - கூறப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகள் ஐவரையும் படையினரே கைது செய்தனர் என்று முறைப்பாடு

திருகோணமலை,மார்ச்4

திருகோணமலைப் பகுதியில் கடந்த மாதம் 25ஆம் திகதி முதல் காணாமற்போயிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் ஐவரையும் படையினரே கைதுசெய்துள்ளனர். இதற்கான ஆதாரங்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை ஸ்ரீலங்கா இராணுவம் கைதுசெய்ததை நேரில் பார்த்த சாட்சியையும் இணைத்து கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்திருக்கிறோம் என்று திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

திருகோணமலை தெற்கின் மூதூர் பிரதேசத்தில் ஆதியம் கேணியிலிருந்து இறால்குழி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தபோது எமது 5 உறுப்பினர்கள் காணாமற்போயினர்.

காணாமல்போன தனிநேசன், இசையரசன், வேல்மாறன், பாகவதன், அரவிந்தன் ஆகிய

(16ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் மட்டுமல்ல முழு நாட்டுக்குமே ஜெனீவாப் பேச்சில் வெற்றி!



## ஜனாதிபதி பெருமிதம்; இந்த நல்ல வாய்ப்பைத் தவறவிடவே மாட்டாராம்

கொழும்பு, மார்ச்4

“பிற்போக்குவாதிகளின் மிரட்டல்களுக்கும், எதிர்ப்புப் போராட்டங்களுக்கும் அடிபணிந்து தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண நான் எடுத்திருக்கும் நடவடிக்கையை இடைநடுவில் நிறுத்தி விடமாட்டேன்.

“இருதசாப்த காலமாக எரிந்துவரும் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றை ஏற்படுத்தி, அதன்மூலம் இந்த நாட்டில் மூவின மக்களின் நிம்மதியான - சந்தோசமான - வாழ்வையும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையும் உறுதிப்படுத்த இப்போது எனக்கொரு நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஜெனீவாப் பேச்சு இந்த வாய்ப்பை எனக்களித்துள்ளது. நாட்டின் நலன்கருதி நான் ஒருபோதும் இந்த வாய்ப்பை நிராகரிக்கமாட்டேன்.”

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திஸ்ஸமகராம தெபருவள தேசியப் பாடசாலையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த மாதம் ஜெனீவாவில் இடம்பெற்ற சமாதானப் பேச்சு இரு தரப்புகளுக்குமே வெற்றியைத் தந்துள்ளது. இந்த வெற்றி வெறுமனே புலிகளுக்கும் அரசுக்கும் கிடைத்த வெற்றியல்ல.

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பல்கலை. மாணவருக்கு தங்குமிடம் வழங்கி ஒத்துழைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்4

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தமது உயர் கல்வியைத் தடையின்றி தொடர்வதற்கு வசதியாக அவர்களுக்கான தங்குமிட வசதிகளை தங்குதடையின்றி வழங்க பொதுமக்கள் முன்வரவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்.

துணைவேந்தரின் சார்பில் பல்கலைக்கழக நலச்சேவைகளுக்கான பதிவாளர் யோ. ஜெயக்குமார் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் தமது உயர்கல்வியைத் தடையின்றி தொடர்வதற்கு அவர்களின் தங்குமிட வசதி நல்லமுறையில் அமைவது முக்கியமானதாகும். ஆகவே, எமது பிரதேசத்தின் வளர்ச்சியில், மாணவர்களின் எதிர்காலத்தில் அக்கறைகொண்டுள்ள பொதுமக்கள் எமது பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கு தங்களால் வழங்கப்பட்ட தங்குமிடவசதிகளை தொடர்ந்து தடையின்றி வழங்கவேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் இதுவிடயம் தொடர்பாக பொதுமக்கள் தமக்குள்ள பிரச்சினைகளை உதவிப் பதிவாளர் (நலச்சேவைகள்) அவர்களுடன் நேரடியாகவோ, 222 6716 என்ற தொலைபேசி இலக்கத்திலோ தொடர்பு கொண்டு தெரியப்படுத்தலாம் - என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)

## வீதியில் வெட்டப்பட்ட குழியினால் விபத்து

யாழ்ப்பாணம்,மார்ச்4

கல்வியங்காடு சந்திக்கு அருகில் வெட்டப்பட்டுள்ள குழியினால் தினமும் விபத்துக்கள் இடம்பெற நேரிடுகின்றது என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த பல மாதங்களாக இக்குழி காணப்படுகின்றது. இதனால், பாடசாலை மாணவர்கள் மற்றும் வியாபாரிகள் விபத்துக்களைச் சந்தித்து வருகின்றனர்.

இரவில் அடிக்கடி ஏற்படும் மின்சாரத்தடை காரணமாக பயணிகள் இக் குழிக்குள் வீழ்ந்து விபத்தைச் சந்தித்து வருகின்றனர் என்று கூறப்பட்டது. இக்குழியினை மூடுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரயாணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-7)

## சுருட்டு தயாரிப்பதற்கான கூலி அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்4

ஆயிரம் புகையிலைச் சுருட்டுக்களைச் சுருட்டுவதற்கான கொடுப்பனவு 600 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருப்பதாக வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கம் அறிவித்திருக்கிறது. வடமாநில சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருப்பதாக சங்கம் அறிவித்திருக்கிறது.

சுருட்டுத் தயாரிப்பதற்கான கூலி அதிகரிக்கப்படுவதையடுத்து சுருட்டு விற்பனை விலையும் உயர்த்தப்படும் என்று சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் நியமனத்துக்கும் ஹெலஉறுமய எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 4

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவராக சுவீடன் நாட்டவர் நியமிக்கப்பட்டமைக்கும் ஜாதிக ஹெல உறுமய எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெலஉறுமயவின் பொதுச்செயலாளர் வண.ஒமல்பே சோபித தேரர் இது தொடர்பில் கூறியுள்ளதாவது: -

ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம்பெறாத நாடு நோர்வே. ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடாக இருக்கிறது சுவீடன்.

சுவீடன் நாட்டவரை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக நியமித்திருப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை பாதுகாக்கும் முயற்சியில் நோர்வே ஈடுபட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியநாடு ஒன்று புலிகளை ஏற்று அங்கீகரிக்கும் வேலையை இந்தச் செயற்பாடுமூலம் நோர்வே ஒப்பேற்றியிருக்கின்றது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்திய புலிகள் குழுவினர் இன்னமும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பயணம் மேற்கொண்டு நிதி சேகரித்துக் கொண்டிருக்கின்றனர் . என்றார் வண. ஒமல்பே சோபித தேரர்.

# சீன வர்த்தகக் கண்காட்சிக்கு இம்முறையும் யாழ். வர்த்தகர்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்4

சீனாவில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள வர்த்தகக் கண்காட்சிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்தும் வர்த்தகர்களை அழைத்துச்செல்ல யாழ். வணிகர் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

பார்வையாளர்களாகக் கலந்துகொள்ள விரும்பும் வர்த்தகர்களிடம் இருந்து வணிகர் கழகம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இது தொடர்பாக வணிகர் கழகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சீனாவில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிவரை நடைபெறவிருக்கும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சிக்கு வர்த்தகர்களைப் பார்வையாளர்களாக அழைத்துச்செல்ல யாழ். வணிகர் கழகம் ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

வர்த்தகத் துறையில் புதிய புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்துவரும் சீனா, தனது உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்த இக் கண்காட்சியை நடத்திவருகிறது.

புதிய தொழில்நுட்பத்தை இங்கு அறிமுகம் செய்யும் நோக்குடனும் விலை குறைந்த பொருள்களை இங்கு விற்பனை செய்யும் நோக்குடனும் 20 பேர் அடங்கிய யாழ். வர்த்தகர் குழு 2004 ஒக்ரோபர் மாதத்தில் நடைபெற்ற சீன 'கன்ரூன்' வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்றியது. அக் கண்காட்சியில் சீன வர்த்தகர்களுடன் கலந்துரையாடி நேரடியாக அவர்களின் உற்பத்திப் பொருள்களை இங்கு இறக்குமதி செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது. அத்துடன், தாம் எதிர்பார்த்ததை விட கூடிய பலன் தமக்குக் கிடைத்ததாகக் கருத்துத் தெரிவித்தனர்.

ஆகவே, இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் சீன 'கன்ரூன்' வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் வர்த்தகர்கள் இல. 165, மானிப்பாய் வீதியில் உள்ள யாழ். வணிகர் கழகத்துடன் 10.03.2006இற்கு முன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதன் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வர்த்தக வங்கியின் 7 கிளைகள் இனிமேல் சனிக்கிழமையும் இயங்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்4

வர்த்தக வங்கியின் யாழ்ப்பாணக் கிளை உட்பட ஏழு கிளைகள் இன்று முதல் சனிக்கிழமைகளில் வங்கிச் சேவைக்காக திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம், கண்டி, காலி நகரம், மொறட்டுவ, நுகேகொட, வெள்ளவத்தை, ரீட் அவனியூ, புறக்கோட்டை பிரதான வீதி ஆகிய கிளைகளே சனிக்கிழமைகளில் திறக்கப்படவிருக்கின்றன.

இந்தச் சேவை முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை இடம்பெறும். (ஐ-3)

# யாழ். இந்து பழைய மாணவரின் நூற்றாண்டு மலர் நேற்று வெளியீடு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நூற்றாண்டு மலர் வெளியீட்டுவிழா நேற்றுக்காலை கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள சிவஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட வழிபாட்டினைத் தொடர்ந்து 'பாண்ட்' வாத்திய இசை அணிவகுப்பு மரியாதையுடன் விருந்தினர்களும் மூத்தோர்களும் விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

மங்கள விளக்கினை யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் க.பரமேஸ்வரன், பழைய மாணவர் சங்கத்தின் கொழும்பு கிளையின் போஷகரும் ஓய்வுபெற்ற நில அளவை நாயகமும் பொதுச்சேவை ஆணைக் குழு உறுப்பினருமான தா.சோமசேகரம் - இந்துக்கல்லூரி நம்பிக்கை நிதியத்தின் தலைவர் வி.கயிலாசபிள்ளை, மூத்த பேராசிரியரும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையின் தலைவர் ச.ராகவன், இந்துக் கல்லூரி பழைய மாணவர் குழுமத்தின் தலைவரும் அதிபருமான 'சுடர்' இ.மகேந்திரன், யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்சங்க ஜேர்மனிக்கிளையின் தலைவர் கே.சி. இராமநாதன், 'உதயன்' 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் ஆகியோர் உட்பட பலர் ஏற்றினர்.

தொடக்கவுரையினை யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து 75 வயது தொடக்க 98 வயதிற்குட்பட்ட இந்துக் கல்லூரியின் மூத்த பழைய மாணவர்களும் கல்விமான்களுமாகிய 18 பேர் பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்பட்டனர்.

அறிமுகவுரையினை மலர்க்குழுத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேலும் வெளியீட்டுரையினை மலராசிரியரும் பேராசிரியருமான கா.குகபாலனும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து நூற்றாண்டு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பிரதம விருந்தினர் தா.சோமசேகரம் நூலை வெளியிட்டுவைக்க முதற்பிரதியை 'இ.ச.பேரம்பலம்' சக நிறுவனத்தின் உரிமையாளர் இ.ச.பே.நாகரத்தினம் பெற்றுக்கொண்டார். பின்னர் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.

நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டி களில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.(ஐ-7-86-111).





யாழ். இந்து பழைய மாணவர் சங்க நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழாவில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை முதல் படத்திலும் சங்கத் தலைவர் க.பரமேஸ்வரன், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

யாழ். இந்து பழைய மாணவர் குழுமத்தின் தலைவர் 'சுடர்' இ.மகேந்திரன் மூத்த பழைய மாணவர் ஒருவருக்கு பொன்னாடை போர்த்து கௌரவிப்பதையும் நூற்றாண்டு மலரின் முதற்பிரதியை பிரதம விருந்தினர் தா.சோமசேகரத்திடம் இருந்து இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்தின் உரிமையாளர் இ.ச.பே.நாகரத்தினம் பெற்றுக்கொள்வதையும் கடைசிப் படங்களில் காணலாம். *(படங்கள்:பிரபா)*

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## சூழம்பி நிற்கும் தெற்கு

ஜெனீவாவில் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுகளின்போது புலிகள் கையாண்ட தந்தி ரோபாய உத்தி காரணமாகத் தென்னிலங்கையில் பெரும் அரசியல் நெருக்கடி உருவாகியிருக்கின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய அரசுடன் நடந்த முதல் பேச்சிலேயே - ஆரம்ப அடியிலேயே - தென்னிலங்கையில் இவ்வாறு குழப்பம் என்றால், இனிவரும் பேச்சுகளின்போது புலிகள் எடுக்கப்போகும் தந்திர நகர்வுகளால் தென்னிலங்கையில் பூகம்பம் வெடிக்கும் நிலைமை ஏற்பட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்று எண்ணத் தோன்றுகின்றது.

அனுசரணைப் பொறுப்பிலிருந்து நோர்வேயை விரட்டுவோம் என்றார்கள்; எந்தப் பேச்சும் ஆசிய நாட்டில்தான் என்று அறிவித்தார்கள்; தற்போதைய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நிராகரித்து புதிய ஒப்பந்தம் செய்வோம் என்றார்கள்.

ஆனால், அவை எவையும் நடக்கவேயில்லை.

அனுசரணைப் பணியைத் தொடரும்படி நோர்வேக்கு வெற்றிலை வைத்து அழைக்க வேண்டியவர்களானார்கள்; புலிகள் குறிப்பிட்ட மாதிரி ஐரோப்பிய நாடு ஒன்றில் - ஐரோப்பாவின் மத்தியில் - விடுதலைப் புலிகளோடு சமதையாக இருந்து பேச வேண்டியவர்களானார்கள்; பேச்சின் முடிவில் தற்போதுள்ள யுத்த நிறுத்த உடன்பாட்டை அப்படியே பேணிக் கடைப்பிடிப்பதற்கான முழு ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்று எழுத்தில் - கூட்டறிக்கை மூலம் - உறுதி கொடுக்க வேண்டியவர்களானார்கள்.

யதார்த்தம் புரியாமல் பேசியதால் - யதார்த்தத்தை எதிர்கொள்ள முடியாமல் - தடுமாறும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள் தென்னிலங்கை அரசியல்வாதிகள். அதனால்தான் தெற்கில் இந்த அரசியல் நெருக்கடிகள்.

தற்போதைய சமாதான முயற்சிகள் 2002 இல் ஆரம்பமான போது, அதனை ஆரம்பித்த அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அனுசரணைப் பணியாற்றும் எரிக் சொல்ஹெய்மும் அந்த ஆரம்பக் கட்டத்திலேயே சுட்டிக் காட்டியமை போன்று சமாதான முயற்சிகள் என்ற வழித்தடம் மிகவும் கரடு முரடானது. பல நெருக்கடிகளை - சவால்களை - தரக் கூடியது. அவற்றையெல்லாம் வெற்றிகரமாக எதிர்கொண்டு தாண்டித்தான் அமைதித் தீர்வை எட்டியாக வேண்டும்.

அந்தக் கூற்று இப்போதும் பொருத்தமானதே.

புதிய அரசுக்கு முதல் சுற்றுப் பேச்சிலேயே புலிகள் வைத்த 'செக்-மேட்' இவ்வளவு குழப்பங்களை தெற்கில் உருவாக்கும் என்றால் இனி வரப்போகும் பேச்சுகளில் புலிகளின் தந்திர நகர்வை அரசு எப்படி எதிர்கொள்ளப் போகின்றது என்பதே கேள்வி. அப்போது தெற்கில் நெருக்கடி மேலும் தீவிரமாகலாம் என எதிர்பார்க்க முடியும்.

இப்போதுதான் யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கு புதிய இலங்கை அரசு இணங்கியிருக்கிறது.

துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைந்து, அவற்றை அப்புறப்படுத்துவது அதில் ஓர் அம்சம் மட்டுமே. அதற்கு அப்பால் இன்னும் பல உள்ளன.

யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவது என்பதில் இரண்டு முக்கிய விடயங்கள் உள்ளன.

ஒன்று - மோதல் தணிப்பு (De-Escalation) மற்றது - இயல்பு நிலை ஏற்படுத்துதல் (Normalisation)

இதில் முதலாவதான மோதல் தவிர்ப்பின் ஓர் அங்கமே இராணுவத் துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைந்து அவற்றை வடக்கு, கிழக்கிலிருந்து அப்புறப்படுத்துவதாகும்.

அதைச் செய்வதற்கே இவ்வளவு பின்னடித்து - ஆரவாரம் செய்து - பிகு பண்ணும் - அரசுத் தரப்பு, அடுத்த விடயங்களைப் புலிகள் முன்வைக்கும்போது என்ன பிரதிபலிப்பை வெளிப்படுத்தப் போகின் றது?

இயல்பு நிலையை ஏற்படுத்தல் என்பதில் தமிழ் மக்களின் அன்றாட - அத்தியாவசிய - மனிதாபிமானத் தேவைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்புபட்டிருக்கின்றன.

அரச இராணுவம் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்திருக்கும் பொது மக்களின் வாழிடங்களை விட்டு வெளியேறி, அந்த மக்களை இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப அனுமதியளித்தல் -

கடற்றொழிலாளர்கள் கட்டுப்பாடின்றித் தமது தொழிலைச் செய்வதற்கு இடமளிப்பதன் மூலம் அவர்களின் அன்றாட ஜீவனோபாயத் துக்கு வழி செய்தல் -

அரசுப் படைகள் ஆக்கிரமித்து வைத்திருக்கும் பொதுக் கட்டடங்கள், மத வழிபாட்டு மையங்கள் போன்றவற்றிலிருந்தும் படை களை அகற்றுதல் -

ஆகியவை பற்றியெல்லாம் புலிகள் அடுத்த சுற்றுப் பேச்சுகளில் வலியுறுத்துவார்கள்; வற்புறுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவை பற்றியெல்லாம் பேசித் தீர்வு கண்டு, நடைமுறைப்படுத்திய பின்னரே இடைக்காலத் தீர்வு குறித்தோ, இறுதித் தீர்வு குறித்தோ, அரசியல் விவகாரங்கள் குறித்தோ பேசப்படும் நிலைமை வரும்.

அப்படியாயின், இந்த ஆரம்ப விடயத்துக்கே இப்போது துள்ளிக் குதிக்கும் மஹிந்தவின் அரசு, மோதல் நிலையைத் தணித்து, இயல்பு நிலையை ஏற்படுத்துவது தொடர்பான ஏனைய விடயங்கள் வரும்போது எப்படி சமாளிக்கப் போகின்றது? அவ்விடயங்களில் தனது கடப்பாட்டை - பொறுப்பை - எப்படி நிறைவு செய்யப் போகின்றது?

அதுவும் - ரணில் அரசோடு விடுதலைப் புலிகள் பேச்சு நடத்திய சமயத்தில் 'போர் நெருக்கடியைத் தணித்து இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்காக' அரசும், புலிகளும் சேர்ந்து அமைத்த உப குழு தொடர்பான நடவடிக்கைகளில் அப்போது பங்குபற்றி அக்குழுவில் தனது பௌத்த-சிங்கள மேலாண்மைப் போக்கை வெளிப்படுத்தி, அதன் மூலம் அந்தக் குழுவே செயலிழந்து செத்துப்போக வழி செய்த அப்போதைய யாழ். படைத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவைத்தான் இப்போதைய அரசு இராணுவத் தளபதியாக நியமித்து வைத்திருக்கிறது.

அப்படியானவர் இராணுவத் தளபதியாக இருக்கும்போது இத்தகைய சிக்கலான விடயங்களைத் தென்னிலங்கை சிங்கள அரசு எப்படிக் கையாளும் என்பது ஊகிக்கத்தக்கதே.

அமைதி முயற்சிகளில் அரைக் கால் கிணறு தாண்ட முன்னரே இப்போது குழம்பிப் போய் நிற்கும் தென்னிலங்கைத் தரப்பு இனிமேல் அரைக் கிணறு கூடத் தாண்டும் என்று எதிர்பார்ப்பது வெறும் அபத்தமே.

# கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி தொழில் பல்கலைக்கழகமாக தரமுயரும்!

### கொரிய அரசாங்கம் அதற்கு நிதியுதவி

யாழ்ப்பாணம்,மார்ச் 4

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியை தொழில் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இதற்குரிய நிதியை கொரிய அரசாங்கம் வழங்கவுள்ளதாக யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் அதிபர் ந.யோகராஜன் தெரிவித்தார்.

இதற்கென 130 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதில் 90 மல்லியன் ரூபா கட்டட வேலைகளுக்கும் மீதிப்பணம் நவீன இயந்திரங்களைக் கொள்வனவு செய்வது உட்படப் பல அபிவிருத்தித் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது என்றும் -

இவ்வாறு தொழில் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்துவதன் [illegible] தற்போது தொழிற் கல்வியைக் கற்பதற்குச் சேர்த்துக்கொள்ளும் மாணவர்களை விட கூடிய மாணவர்களை இணைத்துக்கொள்ள முடியும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (த-14)

## அநாதரவாக மீட்கப்பட்ட குழந்தையை தத்துக்கொடுக்க நீதிமன்றம் முடிவு

தென்மராட்சி,மார்ச் 4

மீசாலை மேற்குப் பகுதி பற்றையொன்றில் அநாதரவான நிலையில் கடந்த முதலாம் திகதி கொடிகாமம் பொலீஸாரால் கண்டெடுக்கப்பட்ட பெண் சிசு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் சாவகச்சேரி மருத்துவமனையில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் குழந்தையைத் தத்துக்கொடுப்பதற்கு சாவகச்சேரி நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

குழந்தையைத் தத்தெடுக்க விரும்புவோர் தமது சுயவிவரங்கள், வசதிகள் போன்றவை தொடர்பிலான விவரங்களை எதிர்வரும் 30 ஆவது திகதிக்கு முன்னர் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கலாம் என்றும் -

விண்ணப்பதாரியுடன் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தினையும் விண்ணப்பத்தில் குறிப்பிடுமாறும் நீதிமன்றப் பதிவாளர் செ.விக்னேஸ்வரமூர்த்தி அறிவித்துள்ளார். (த-117)

## ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிதியில் வேலணைப் பிரிவில் 25 வீடுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 4

வேலணைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் நிதி பங்களிப்பில் 25 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவிருக்கின்றன. இதற்காக ஏழு கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுத் திட்டங்கள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன என்று ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிகழ்ச்சித் திட்ட அலுவலர் யூட் வோல்டன் தெரிவித்தார்.

தற்போது சிமெந்து விலை ஏற்ற இறக்கங்களினால் அதனைப் பெறுவதில் கால தாமதம் ஏற்படுகின்றது. விரைவில் அதற்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் -

மணல் பெறுவதற்குப் பிரதேச செயலாளரின் அனுமதியினைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யூட் வோல்டன் தெரிவித்தார். (த-185)

## சேதமடைந்த தார் வீதிகளை புனரமைப்பதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 4

யாழ். மாவட்டத்தில் ஐக்கிய அமெரிக்காவின் உதவித் திட்டத்தின் கீழ் பழுதடைந்த தார் வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்காக மாவட்ட மட்டத்தில் புனரமைப்புச் செய்யப்படவுள்ள வீதிகளின் விவரம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக சகல சபைச் செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட வீதிகளின் மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் வீதி அபிவிருத்தி வேலைகள் அரசாங்க அதிபரினால் முன்னெடுக்கப்படும்.

ஐக்கிய அமெரிக்காவின் "புத்தாயிரமாண்டுச் சவால்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வீதி புனரமைப்பு" (Millenium Challenge Account) எனும் தலைப்பில் இந்த வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

வீதி புனரமைப்புக்கு 12 பிரதேச சபைகளும், 3 நகர சபைகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(த-185)

### உதயவாக்கு

நேர்மையற்ற சினத்தை நியாயப்படுத்த முடியாது. சினத்தால் நிலை தடுமாறுவோர் வீழ்ச்சியடைவர்.

- சாலமோனின் நீதி மொழி.

### நாளை

மாசி 21
ஞாயிற்றுக்கிழமை
05.03.2006
திதி:சஷ்டி
முன்னிரவு:08.11 வரை
நட்சத்திரம் : பரணி
முற்பகல் : 08.57
சுபநேரம் : 09.26 - 10.56
ராகுகாலம் :04.56 - 06.26
(யாவும் பழைய நேரப்படி)

### சட்டவிரோதமாக

## மணல் ஏற்றிவந்த வாகனங்கள் சில பொதுமக்களால் அடித்து நொருக்கப்பட்டன

### தென்மராட்சியில் சம்பவம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் இரவு வேளைகளில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் பொது மக்களால் தடுக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பிரதேசத்தின் சில பகுதிகளில் மணல் ஏற்றிவந்த பார ஊர்திகள் மக்களால் தடுக்கப்பட்டு, அவற்றின் ரயர்கள் கோடரி, கத்திகளால் வெட்டிச் சேதமாக்கப்பட்டன. அத்தோடு மணலை அவ்விடத்திலேயே பறித்து பார ஊர்தியைத் தீயிட முற்பட்டனர். அவ்வேளையில் பார ஊர்திகளின் சாரதிகள் மன்னிப்புக் கேட்டதையடுத்து எச்சரிக்கை செய்யப்பட்டு பார ஊர்திகளை சேதமடைந்த நிலையில் கொண்டு செல்ல அனுமதித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (3-117)


## பருத்தித்துறை டிப்போவின் பஸ் சேவைகள் வழமைக்கு!

வடமராட்சி,மார்ச்4

பருத்தித்துறை டிப்போவின் பஸ் சேவைகள் அனைத்தும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

கடந்த டிசெம்பர், ஜனவரி மாதங்களில் குடாநாட்டில் நிலவிய அசாதாரணச் சூழ்நிலையினால் இந்த டிப்போவினால் நடத்தப்பட்டுவந்த பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

தற்போது வழமையான நேரப்படி பஸ் சேவைகள் இடம்பெற்று வருகின்றன. முன்னைய காலங்களைப் போல் அதிகாலை 5.15 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கும் 5.30 மணிக்கு முகமாலைக்கும் முதலாவது பஸ்சேவைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. (த-173)





மணற்காட்டுப் பிரதேசத்திற்கு முதன்முதல் மின்சாரம் வழங் கும் வைபவம் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.
வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் எஸ்.ஜெயசீலன், கியூமெடிக்கா நிறுவன இணைப்பாளர் ஜே.ஜெயக்குமார், யாழ்.மின்சார சபை உத்தியோகத்தர் எஸ்.அருள்ஞானம் ஆகியோர் கூட்டாக மின்சார வழங்கலை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். *(படம்:- கரவெட்டிச் செய்தியாளர்)*

# கைலைப்புராணம் நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம்,மார்ச் 4

சிவசத்தர் அருளிய 'கைலைப்புராணம்' நான்காம் பதிப்பு நூல் அறிமுகவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் அளவெட்டி திருவடி நிழல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் திருவடி நிழல் தொண்டர்களான ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் இசை ஆசிரியர் கே.எஸ்.சிவஞானராஜா மற்றும் ப.இலங்க நாயகம், செ.ஞானசொரூபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூல்வெளியீட்டினைத் தொடர்ந்து மகேஸ்வரப் பூஜையும் இடம்பெறவுள்ளது. (த-13)

# சமயசந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச்4

வண்ணை. கன்னாதிட்டி காளியம்பாள் ஆலய பெரும் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (3-206)

★ ★ ★

தென்மராட்சி கிழக்கு,மார்ச்4

துன்னாலை வடக்கு புலோலி வல்லிபுர ஆழ்வார் ஆலய ஏகாதசி உற்சவம் எதிர்வரும் 10ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி வீம ஏகாதசி பூசையும் 25ஆம் திகதி அபர ஏகாதசி பூசையும் இடம்பெறவுள்ளன. (3-122)

★ ★ ★

வலி.வடக்கு,மார்ச்.4

சுன்னாகம் வருஷப்புலம் மகாமாரி அம்பாள் ஆலய பெரும் திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (3-86-203)




## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அவனியில் 25 - 07 - 1934



ஆறடியில் 10 - 03 - 2000

**அமரர் சிவக்கொழுந்து சீனிவாசகம்**

**திதி: 04-03-2006 (பஞ்சமி)**

*அன்பின் அணிகலனாய்*
*அரவணைப்பில் ஆலமரவிழுதாய்*
*ஆதரவளிப்பின் அடிவருடியாய் இருந்து*
*இமைப்பொழுதில் இம்மண்ணில் விதையானது ஏனோ?*

62, புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வருந்தி நிற்கும்:
அன்பு மனைவி, ஆசை மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(47546) (24-32-15-17)

# பிரிவுபசார வைபவம்

பூநகரிக் கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றி வேறு கோட்டப் பாடசாலைகளுக்கு இடம்மாற்றம் பெற்றுச்சென்ற அதிபர்களுக்கான பிரிவுபசார வைபவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிராஞ்சி அ.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிமனை திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ம.பத்மநாதன் கலந்துகொள்வார்.

பூநகரி ம.வி. முன்னாள் அதிபர் எஸ்.கியூ.பி.மொறாயஸ், முழங்காவில் ம.வி. முன்னாள் அதிபர் பா.சிவராஜா, வேரவில் இந்து ம.வி. முன்னாள் அதிபர் அ.க.ஜெயக்குமார், பல்லவராயன்கட்டு இ.த.க.பாடசாலை முன்னாள் அதிபர் இ.விஜயநாதன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

# சுகாதாரக் குழுக்களை நியமிக்கக் கோரிக்கை

தென்மராட்சி,மார்ச்4

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இயங்கும் சனசமூக நிலையங்களில் சுகாதாரக் குழுக்கள் நியமித்து அப்பகுதிகளை சுத்தமாக வைத்திருக்குமாறு நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

அத்துடன் சனசமூக நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் சேரும் குப்பைகளை பசளையாக்கிப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

சனசமூக நிலையங்கள் முன்னரைப் போன்று சகல செயற்பாடுகளையும் ஆரம்பித்து சிறப்பாகச் செயற்படுத்தவேண்டுமெனவும் அறிவித்துள்ளார். (த-117)

## கடற்றொழிலாளர் இரத்ததானம் வழங்கினர்

நல்லூர்,மார்ச்4

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சம்மேளன அலுவலகத்தில் நேற்று இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் போதிய இரத்தம் கைவசம் இல்லாத நிலையில் நோயாளர்களின் அத்தியாவசிய தேவை கருதி சம்மேளனம் இந்த இரத்ததானம் வழங்கும் நிகழ்வை ஒழுங்கு செய்ததாக சம்மேளனத்தின் தலைவர் எஸ்.தவரத்தினம் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியைச் சேர்ந்த வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி வி.ஜேக்கப்சன் தலைமையிலான உத்தியோகத்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.

கடற்றொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த பலர் இரத்ததானம் செய்தனர். (3-111)

# சூழல் பாதுகாப்புக் குழு

தென்மராட்சி, மார்ச் 4

தென்மராட்சி பிரதேசத்திற்கான சூழல் பாதுகாப்பு நிர்மாணக்குழு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் 15 பேர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டது.

குழுவின் தலைவராக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும் உப தலைவராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்) செல்வி கிருபா வீரசிங்கமும் செயலாளராக பிரதேச சுற்றுச்சூழல் பாதுகாப்பு அலுவலர் திருக்குமரனும் பொருளாளராகப் பிரதேச செயலக காணி அலுவலர் க.சிவசுப்பிரமணியமும் தெரிவுசெய்யப்பட்டனர். (த-117)

## நன்றி கூறுகின்றோம்

**17.02.2006 அன்று எம்மால் தவறவிடப்பட்ட கைச்சங்கிலியைக் கண்டெடுத்து எம்மிடம் ஒப்படைத்தமைக்காக வண்ணார்பண்ணையைச் சேர்ந்த இ.சிவயோகன் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

(47551)(32-15-17) **சு.சதானந்தன்.**

# தவக்காலச் சிந்தனை 4

## யாருக்கு மருத்துவர் தேவை?

வரி வசூலிப்பாளரான லேவி என்பவரை இயேசு 'என்னைப் பின்பற்றி வா' என அழைத்தார். அவரும் இயேசுவை ஏற்று தன்வீட்டில் விருந்தளித்தார். தவறுகளை உணர்ந்து மனமாற்றம் அடைந்தார்.

அப்போது தம்மை நீதிவான்கள் எனக் கூறிக்கொள்வோர் இயேசு ஒதுக்கப்பட்ட பாவிகளோடு விருந்துண்பது ஏன்? என இடறல்பட்டனர். அதற்கு இயேசு 'நோயற்றவர்களுக்கு அல்ல, நோயுற்றவர்களுக்கே மருத்துவர் தேவை. நேர்மையானவர்களை அல்ல பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்' என்றார். (லூக் 5:31-32)

நோயுற்றவர் யார்? தீராத உடல் நோயாளிகள் மட்டுமா நோயுற்றோர்? ஆன்மீக வழி நடத்தலற்றோரும். தாக்கங்கள், சுமைகளில் இருந்து மீளமுடியாது மன உளைவுக்குட்பட்டோரும் நோயாளிகளே! வறுமை, இழப்பு, தனிமை, புறக்கணிப்பு, ஒடுக்குமுறை, விரக்தி என்பனவும் மனித மனங்களை உள்ளார்ந்த ரீதியாக சாகடிக்கும் கொடிய நோய்களே. இவற்றை மருந்து மாத்திரைகள் குணப்படுத்துமா? இல்லவே இல்லை. பிறரிடம் இருந்துவரும் அன்பும் அரவணைப்பும் கனிவான மொழிகளும் உதவிகளும் சுதந்திர உரிமை கரிசனை என்பனவே உள்ளக் காயங்களுக்கு சிறந்த ஔடதமாகும்.

இந்த விலை மதிப்பில்லா மருந்து ஒவ்வொருவருக்குள்ளும் ஒளிந்து கிடக்கிறது. அவற்றைத் தட்டி எழுப்பி வெளிக்கொணர்ந்து அவரவர்களுக்கு உரியமுறையில் வெந்த உள்ளங்களில் பூசி உளவள ஆற்றுகையுடன் கூடிய அனைத்து உதவிகளையும் உவந்தளிப்போம்.

**- எஸ்.யேசுதாஸ்**
*கொழும்புத்துறை.*

## உடனடி வேலைவாய்ப்பு

*யாழ்.நகரில் உள்ள பிரபல ஹோட்டலில் பணியாற்ற (உணவு பரிமாறுபவர், ரீ மேக்கர், சிற்றுண்டி தயாரிப்பாளர்) ஆள்கள் தேவை.*

*நேரில் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-*

**பிறின்ஸ் ஹோட்டல்,**
**514, ஆஸ்பத்திரி வீதி (O.P.D முன்பாக),**
**யாழ்ப்பாணம்.** (47545)(32-15-17)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர்**
**நாகப்பர் இராதாகிருஷ்ணன்**
*(சுங்கத் திணைக்கள அத்தியட்சகர்)*

**அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துன்பத்தில் நாமும் பங்குகொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**லண்டன்.** (47534)(32-17-15) **வே.ராஜ்குமார்.**

## மரண அறிவித்தல்கள்

### *சிவகுருநாதன் இலட்சுமி*



நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சிவகுருநாதன் இலட்சுமி அவர்கள் 28.02.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - நல்லமுத்து தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சிவகுருநாதனின் அன்பு மனைவியும் தயாறஞ்சினி (சுகாதார முகாமைத்துவ உதவியாளர், யாழ்.போதனா வைத்தியசாலை), சிவகுமாரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவரூபன் (ரூபன் ஒலி, ஒளி அமைப்பு உரிமையாளர்), பத்மறஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயும் பூபதியம்மா, கந்தசாமி, தவராசா, விஜயரத்தினம், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜயலட்சுமி, சுந்தரலிங்கம், பூபதி, சிவபாக்கியம் (கனடா), செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (05.03.2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜவீதி,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*
T.P.No.: ***0776139618.*** (47544)(32-15-17)

தகவல்:
***சி.சிவகுருநாதன்***
**(கணவர்).**

### *திருமதி விசாகப்பெருமாள் உலகநாயகி*

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி விசாகப்பெருமாள் உலகநாயகி அவர்கள் நேற்று (03.03.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தசாமியின் கனிஷ்ட புத்திரியும் திரு.திருமதி வைரமுத்துவின் மருமகளும் காலஞ்சென்ற விசாகப்பெருமாளின் (பொலீஸ் அப்பா) அன்பு மனைவியும் கமலநாதன், விமலநாதன், செல்வநாதன், குணநாதன், சிவநாதன், கமலாதேவி, விமலாதேவி, அன்னராணி (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும் சுந்தரசிகாமணி, பாலேந்திரன், விமலாதேவி ஆகியோரின் மாமியாரும் பிரியதர்சினி, மயூரன், நித்தியா, ஜோதி, ராசன், ஆனந், வசந், கோகுல் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2006) சனிக்கிழமை பாலேந்திரன் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊறணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆலடி வீதி,*
*வல்வெட்டித்துறை.* (47549)(32-15-17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# முல்லைத்தீவு தீர்த்தக்கரை கிராமத்தில் மீன் பதனிடல் நிலையத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்,மார்ச்4

முல்லைத்தீவு மாவட்டப் பொருண்மிய மதியுரையகத்தின் அனுசரணையுடனும் யு.என்.டி.பி.நிறுவன நிதியுதவியுடனும் முல்லைத்தீவு தீர்த்தக்கரை கிராமத்தில் மீன் பதனிடுதலிற்கான கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது.

முல்லைத்தீவில் அதிகளவிலான மக்கள் மீன்பிடியினையே தமது ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இருந்தபோதும் பிடிக்கப்படுகின்ற மீன்களைப் பதப்படுத்தி சந்தைப்படுத்துவதற்கேற்ற வசதி வாய்ப்புகள் அங்கு இல்லை. இந்த நிலைமையினைக் கருதிற்கொண்டு மீன் பதனிடுதல் நிலையத்தினை அமைப்பதன் மூலம் மீனைப் பதப்படுத்துவதோடு வேலையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பினையும் வழங்கலாம் என்ற எதிர்பார்ப்புடனேயே இந் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

அடிக்கல்லினை யு.என்.டி.பி. நிறுவனத்தைச் சேர்ந்த நவநீதன் நாட்டி வைத்தார். தொடர்ந்து வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர், முல்லை மாவட்ட கடற்புலிகளின் தளபதி, பொருண்மிய மதியுரையக திட்ட இணைப்பாளர் கலாநிதி மனோகரன், கணக்காளர் நேசநாதன், முல்லை தொழில்நுட்பக் கல்லூரி உப அதிபர் சதீஸ்குமார், முல்லைபொருண்மிய மதியுரையக வெளிக்கள அலுவலர் விஜயகுமார் ஆகியோர் அடிக்கல்லினை நாட்டி வைத்தனர்.

பெயர்ப்பலகையினை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் திரைநீக்கம் செய்துவைத்தார்.

(த-352)

# மாலதி படையணி மாவீரர்களுக்கு போர்ப்பயிற்சிக் கல்லூரியில் அஞ்சலி

கிளிநொச்சி,மார்ச் 4

2ஆம் லெப். மாலதி படையணி பங்குபற்றிய பல்வேறு தாக்குதல்களில் பெப்ரவரி மாதம் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் நினைவு நிகழ்வு கடந்த வாரம் மாலதி படையணியின் போர்ப் பயிற்சிக் கல்லூரியில் லெப்.கேணல் மதி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரினை 2ஆம் லெப். மாலதி படையணியின் பொறுப்பாளர்களில் ஒருவராக கலைவிழி ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியைப் படையணியைச் சேர்ந்த உஷா ஏற்றினார்.

ஈகச்சுடரினை போராளி அகவாணி ஏற்றிவைத்தார். மாலதியின் படத்துக்கான மலர் மாலையினை போர்ப்பயிற்சி ஆசிரியர்களில் ஒருவரான தமிழ்ப்புயல் அணிவித்தார்.

தொடர்ந்து மலர் வணக்கம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் நினைவு நிகழ்வு, கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. படையணியின் சிறப்புத் தளபதி கேணல் யாழினி மாவீரர் நினைவாக நினைவுரை ஆற்றினார். (த-307)


# மகளிர் தினத்தன்று வவுனியாவில் பேரணியும் எழுச்சி நிகழ்வுகளும்

## பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் ஏற்பாடு

புளியங்குளம்,மார்ச் 4

வவுனியா பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் எதிர்வரும் 8ஆம் திகதி பெண்கள் தினத்தன்று பேரணியும் எழுச்சி நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளன என்று பெண்கள் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் திருமதி புகழரசி தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வை முன்னிட்டுக் கிராமங்கள் தோறும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-355-203)



முழங்காவில் பிரதேசத்தில் சந்தை இல்லை என்று பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியதையடுத்து அங்கு சந்தை அமைப்பதற்கென இடம் ஒதுக்கப்பட்டது. நீண்டகாலமாக இடம் ஒதுக்கப்பட்ட நிலையில் இன்னமும் வேலைகள் தொடங்கவில்லை. அறிவிப்புப் பலகை மட்டுமே அங்கு காணப்படுவதைப் படத்தில் காணலாம்.

# ஆண்டான் குளத்தில் தையல் பயிற்சி நிலையம்

பரந்தன்,மார்ச் 4

மன்னார் மாவட்டத்திலுள்ள ஆண்டான் குளம் கிராமத்தில் பொருண்மிய மதியுரையகத்தின் அனுசரணையுடன் தையல் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்தின் திறப்பு விழா கடந்த 23ஆம் திகதி மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஜசிகரன் தலைமையில் இடம்பெற்றது.

பிரான்ஸ் ரெக் மற்றும் மன்னார் மாவட்டப் பொருண்மிய மதியுரையகம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(த-352-202)

# பயிற்சிப் பட்டறை

பரந்தன்,மார்ச் 4

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிர்வாக அனுசரணையின் கீழ் நிர்வகிக்கப்பட்டுவரும் வடக்கு - கிழக்கு முன்பள்ளி இணைப்பாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை கடந்த 27ஆம் திகதி முதல் 5 நாள்களுக்கு கிளிநொச்சி கனபுரத்திலுள்ள தமிழர் புனர்வழ்வுக் கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வடக்கு - கிழக்கிலுள்ள முன்பள்ளி இணைப்பாளர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர். (த-352)

# சுயதொழில் கடன்

பரந்தன்,மார்ச் 4

மக்களுக்கான வருமான அதிகரிப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் பொருட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் கிளிநொச்சி, பெரிய பரந்தன் கிராமத்தில் சுயதொழில் வாய்ப்புக்கான ஊக்குவிப்புக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

சிறு வியாபாரத்துக்கு மூன்று பயனாளிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபாவும் ஆடு வளர்புக்கு ஐந்து பயனாளிகளுக்கு தலா ஏழாயிரத்து ஐநூறு ரூபாவும் கோழி வளர்ப்புக்கு மூன்று பயனாளிகளுக்கு தலா 6 ஆயிரம் ரூபாவும் நெற்செய்கைக்கு 12 பயனாளிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபாவும் என மொத்தம் இரண்டு லட்சத்து எண்பதாயிரத்து ஐநூறு ரூபா கடன் தொகையாக வழங்கப்பட்டது. (த-352)

# சமையற் கலைப்பயிற்சி

பரந்தன்,மார்ச் 4

கிளிநொச்சி, கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கியூடெக் வன்னி நிறுவனத்தின் அனுசரணையுடன் ஊக்குவிப்புக் குழு அங்கத்தவர்களுக்கு சமையற்கலை பற்றிய கருத்துரைகளும் செய்முறைப் பயிற்சிகளும் அண்மையில் வழங்கப்பட்டன.

வலயக் கல்விப் பணிமனையின் மனையியல் பாட ஆசிரிய ஆலோசகராகப் பணிபுரியும் திருமதி இந்திரா பாலச்சந்திரன் பயிற்சிகளையும் கருத்துரைகளையும் வழங்கினார். (த-307)

## வன்னிச் செய்திகள்

# அனிஞ்சியன்குளம் பகுதியில் பொதுமண்டபம் திறப்பு

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனிஞ்சியன்குளத்தில் பொது நோக்கு மண்டபம் திறந்துவைக்கப்பட்டது.

தொடர்ந்து பொது நோக்கு மண்டபத்தின் பெயர்ப் பலகையைத் துணுக்காய்ப் பிரதேச செயலர் நா.நந்தகுமார் திரைநீக்கம் செய்துவைத்தார்.

புதிய கட்டடத்தைப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ச.கு.சிவகுரு சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டித் திறந்துவைத்தார். மற்றும் அலுவலகக் கட்டடத்தை வவுனிக்குளப் நீர்ப்பாசன பொறியியலாளர் தவக்குமாரும் திறந்துவைக்க களஞ்சிய அறைப் பகுதியை திட்டப் பொறியியலாளர் குகநேசன் திறந்து வைத்தார்.

நினைவு மரக்கன்றை திருமதி பு.சிவபாலன் நட்டுவைத்தார். (த-352)

# சுகாதார, மருத்துவ வசதிகளின்றி மடுப் பிரதேசத்தில் மக்கள் அவதி!

மடுப்பிரதேசத்தில் பல்வேறு கிராமங்களில் அடிப்படை சுகாதாரம் மற்றும் மருத்துவவசதிகள் இல்லாமையால் அக்கிராம மக்கள் பெரும் சிரமங்களின் மத்தியில் வாழ்கின்றனர்.

முள்ளிக்குளம், வலயன்கட்டு, கீரிசுட்டான், பிரசங்குளம், விளாத்திக்குளம் ஆகிய கிராமங்களே அடிப்படை வசதிகள் இன்றி உள்ளன.

இந்தக் கிராமங்களில் சுமார் ஆயிரத்து 500 பேர்வரை வாழ்கின்றனர். இவர்கள் சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகளைப் பெறுவதற்கு 30 கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள மடு மற்றும் பள்ளமடு மருத்துவமனைகளுக்கே செல்கின்றனர்.

போக்குவரத்து வசதிகளற்ற இக்கிராமங்களில் நடமாடும் மருத்து சேவைகளையாவது நடத்துமாறு கிராமமக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

(த-355-202)

# ஒட்டுசுட்டானில் நடமாடும் வங்கிச் சேவை

ஒட்டுசுட்டான்,மார்ச் 4

முல்லை கிராமிய அபிவிருத்தி வங்கி ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நடமாடும் வங்கிச் சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

கடந்த 24 ஆம் திகதி கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

இணைப்பாளர் சந்திரன் தலைமையிலான வங்கிப் பணியாளர்கள் அடங்கிய குழு இந்த நடமாடும் சேவையை நடத்தியது. இந்த நடமாடும் சேவையின் போது கடனடிப்படையில் இருவருக்கு மின்கலன்கள் வழங்கப்பட்டன. பலருக்கு கடன் வழங்குவதற்கான சேமிப்புக்,கணக்குகளும் ஆரம்பிக்கப்பட்டன.

யுத்தத்தால் வலுவிழந்தவர்கள், மீண்டும் தொழிலை ஆரம்பிக்கவுள்ளவர்களுக்கான கடன்களும் விவசாயிகளுக்கு நீர் பம்பி, தெளிகருவி போன்றவை கடன் அடிப்படையிலும் வழங்க வங்கி முன்வந்துள்ளதாக வங்கி இணைப்பாளர் தெரிவித்தார்.

(த-341-202)

# பாண், பணிஸ் விநியோகிப்பவர்களுக்கு தமிழீழ சுகாதார சேவையினர் அறிவுறுத்து

வெதுப்பகங்களில் பாண், பணிஸ், கேக் மற்றும் பலகார சிற்றுண்டி வகைகள் விநியோகிப்பவர்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து தமிழீழ சுகாதார சேவையினர் அறிவித்திருக்கின்றனர்.

வெதுப்பகங்களில் பாண், பணிஸ், கேக் விநியோகிப்பவர்கள் அவற்றைத் திறந்த நிலையில் உரப்பைகள், திறந்தபெட்டிகள், கூடைகள், காட்போட் பெட்டிகள், பாண் வேக வைக்கும் தட்டுகளில் கொண்டு செல்வதால் தூசி மற்றும் பிறமாசுகள் சேருவதுடன் இலையான் மொய்க்கக்கூடிய நிலையும் உள்ளது.

பாண் விநியோகிக்கும்போது கைகளில் அழுக்குத் தொற்று ஏற்படக்கூடிய வகையில் விநியோகிக்கப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

பலகார சிற்றுண்டி வகைகளை விநியோகிப்பவர்கள் கைகளால் எடுத்து விநியோகிப்பதைத் தவிர்த்து இடுக்கிகளை பாவிக்குமாறும் பாண் கொண்டு செல்வதற்கு அலுமினியத்திலான மூடியுள்ள பாதுகாப்பான பெட்டிகளை மாத்திரம் பயன்படுத்துமாறும் தமிழீழ சுகாதார சேவையினர் வெதுப்பக விநியோகஸ்தர்களைக் கேட்டுள்ளனர்.

(த-307)

# தொழில் பயிற்சி பெறும் மாணவருக்கு சைக்கிள்கள்

ஒட்டுசுட்டான்,மார்ச் 4

கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தொழில் சார் பயிற்சி நெறியில் பயிற்சி பெற்றுவரும் மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு கடந்த 22ஆம் திகதி கிளிநொச்சி பல்திறன் பயிற்சி மையத்தில் நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாக அனுசரணையின் கீழ் நிர்வகிக்கப்பட்டுவரும் மைய நிறுவனங்களில் ஒன்றான உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் நிதியுதவியுடன் நீடோ நிறுவனத்தால் பயிற்சியாளர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

'நீடோ', ஊஸ்க் திட்ட உதவி இணைப்பாளர் கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் நீகன், நீடோ நிறுவனப் பணிப்பாளர் ராணி மைந்தன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

தொடர்ந்து ஒட்டு மின் இணைப்புப் பயிற்சியாளர் 25 பேருக்கும் அலுமினியம் பொருத்தும் பயிற்சியாளர்கள் 25 பேருமாக 50 சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

(த-341-203)




# கிராம அபிவிருத்திச் செயலகம் உடையார்கட்டில் திறப்பு

பரந்தன்,மார்ச்4

உடையார்கட்டு தெற்கு, குரவில் கிராமத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்பெற்ற கிராம அபிவிருத்தி செயலகம் கடந்த 28ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

அன்று காலை 10 மணிக்கு நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் செயலக பெயர்ப்பலகையினை முல்லைத்தீவு சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி முகாமையாளர் தயா திரைநீக்கம் செய்துவைத்தார்.

கட்டடத்தை தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் திறந்துவைத்தார். சிறப்புக் கருத்துரையை தங்கன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து வீட்டுத்திட்ட குடியிருப்பாளர்களுக்கான திறப்புகள் கையளிக்கப்பட்டன. (த-352)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா யோகம்மா

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா யோகம்மா அவர்கள் 26.02.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓவசியர் கந்தையாவின் அன்பு மனைவியும் புஸ்பவதி (கோண்டாவில்), கணேசராசா (கொழும்பு), கமலாதேவி (கொழும்பு), மகானந்தன் (இங்கிலாந்து), Dr.மங்க ளேஸ்வரி (ஆஸ்திரேலியா), கலாநிதி குகனேசராசா (இங்கிலாந்து), புனிதவதி (ஆஸ்திரேலியா), ஞானத்திலகம் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயும் பேராசிரியர் குணரத்தினம் (கோண்டாவில்), சிவராணி (கொழும்பு), விஜயேந்திரன் (கொழும்பு), மீனா (இங்கிலாந்து), கைலைநாதன் (ஆஸ்திரேலியா), கமலாம்பிகை (இங்கிலாந்து), ஜெகதீசன் (ஆஸ்திரேலியா), ஜெயசிறீ (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும் இங்கிலாந்தில் வசிப்பவர்களான Dr.தயாபரன், மகிந்திரன், Dr.சுயேந்திரன், யோகந்தி கொழும்பில் வசிப்பவர்களான குமுதினி, லோகினி, லோகபவன் ஆஸ்திரேலியாவில் வசிப்பவர்களான கணேஷ் குமார், Dr.ஜயந்தினி, ஐங்கரன், Dr.கந்தழி, துர்க்கா, துவாரகன் மற்றும் காலஞ்சென்ற நந்தகுமார் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிரிஷ்ணி, செந்தூரன், தனாதினி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோண்டாவில் மேற்கு பாடசாலை ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (05.03.2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் காரைக்கால் இந்துமயானத்திற்கு முற்பகல் 11 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (47522)(32-16)

பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு.

தகவல்:
பேராசிரியர் க.குணரத்தினம் (மருமகன்).

## அ.க.கணேசரத்தினம்



காசிப்பிள்ளையார் கோயிலடி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் கணேசரத்தினம் (முன்னாள் பொது வேலைகள் பகுதி ஓவசியர்) அவர்கள் 28.02.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசுந்தரம் - மாமாங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் மங்களநாயகியின் பாசமிகு கணவரும் விமலராஜா, நிரஞ்சலா ஆகியோரின் அன்புத் தந்தையும் கங்காதேவி, சுதந்திரநாதன் ஆகியோரின் பாசமிகு மாமனும் சுப்பிரமணியம் (சுப்பையா), சரஸ்வதி, வள்ளிநாயகி, கெங்காதரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சஞ்ஜீவன், கோபிநாத், பிறேம்நாத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.03.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அன்று பிற்பகல் 1.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4 மணிக்கு கல்கிசை பொதுமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18 1/1, Charlimont Road,
Colombo - 6.
T.P.No.: 2588597, 2580759.

தகவல்:
மகன், மகள்.
0777 252926.

(47519)(32-16)

## ஆயுள்வேதக் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த அல்லது வைத்திய பரம்பரையினராயின் ஜி.சீ.ஈ. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்த 18 வயது தொடக்கம் 28 வயது வரையானவர்கள் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-202)

## கண்காட்சி குறித்து ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்.விஞ்ஞான சங்கத்தினால் நடத்தப்படவுள்ள விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டி தொடர்பான ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டிக்கு விண்ணப்பித்திருக்கும் பாடசாலைகளின் ஆசிரியர்கள் இருவர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளலாம்.

இதேவேளை - கண்காட்சிப் போட்டிக்கு இதுவரை விண்ணப்பிக்காது புதிதாக இணைந்துகொள்ளவிரும்பும் பாடசாலைகளின் ஆசிரியர்கள் இருவர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளலாம் என்று மேற்படி கண்காட்சி நிகழ்ச்சி தொடர்பான செயலாளர் ஸ்ரீ அருளானந்தம் கேட்டுள்ளார். (3-13)

**Organ/Violin Notes**

ஓர்கன், வயலின், கிற்றார், வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளுக்கான சினிமாப்பாடல்களின் இசைக்குறிப்புகள் (பாகம் 1-42) கேள்விஞானம், மேற்கத்தேய இசைபற்றி தெரிந்து கொள்வோம். Key Board, exercise ஆகிய புத்தகங்கள் விற்பனைக்குண்டு.

ஓர்கன் வகுப்புகள் பிற்பகல் 4 மணியிலிருந்து நடைபெறுகின்றன.

S.S.Rajeendran,
Karaweena Isai Manram, 75, Temple Road,
Nallur, Jaffna. T.P.: 0713055991.
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500 மீற்றர் தெற்கே)

(47351)

**தேவை**

சுன்னாகம் நகர எல்லைக்குள் அமைந்துள்ள வைத்திய நிலையம் ஒன்றில் பணியாற்ற வைத்தியர் ஒருவர் தேவை.
(D.A.M, B.S.M.S)
தொடர்பு: 077 6913056

(47387)

## பொங்கலுக்குச் செல்லப் படைத்தரப்பு அனுமதி

தென்மராட்சி, மார்ச் 4

தென்மராட்சி தெற்கு அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்திற்கு அடியார்கள் செல்வதற்குப் படைத்தரப்பில் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆலயத்தில் தற்போது நாளாந்த பூஜைக்கு படையினரின் துணையுடன் பூசகர் சென்று வருவதாகவும் -

அப்பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்திற்கு பொதுமக்கள் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (3-117)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று யாழ்ப்பாணம் (பளை)

வழ/இல:- 396/05
தன்மை:- காணி
பெறுமதி:- 10,00,000/-

பஞ்சலிங்கம் தமிழ்ச்செல்வன்,
பெரியதம்பிரான் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
வழக்காளி

எதிர்

1) ஞானசுந்தரம் உதயசங்கர்,
பெரியதம்பிரான் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
2) மணியம் சுதன்,
கே.கே.எஸ். றோட்,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
எதிராளிகள்

மேற்படி 2ஆம் எதிராளிக்கு

### பகிரங்க அறிவித்தல்

இந்த 2005ஆம் ஆண்டு 9ஆம் மாதம் 2ஆம் நாள் வழக்காளி மேற்படி எதிராளிகளுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்திருந்த அதேசமயம் உரியமுறையில் மன்றின் ஊடாக அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்கப்பட்டது. வழக்கின் பொருட்டிலான முதலாம் எதிராளி மன்றுக்கு சமுகம் கொடுத்திருந்தார். ஆயினும் 2ஆம் எதிராளியான நீர் மன்றுக்கு சமுகம் கொடுக்கத் தவறிவருவதனால் பத்திரிகை ஊடாக இப்பகிரங்க அறிவித்தல் உமக்கென பிரசுரிக்கப்படுகிறது என்பதுடன் இவ்வழக்கிலான மறு தவணை எதிர்வரும் 09.03.2006 அன்று இம் மன்றில் உள்ளதனால் அத்தவணைக்கு சமுகம் கொடுத்து உமக்கான சட்டத்தகுதி ஏதேனும் இருப்பின் மன்றில் வெளிப்படுத்துமாறும் தவறின் இப்பகிரங்க அறிவித்தல் உமக்கு சேர்ப்பிக்கப்பட்டும் நீர் சமுகம் கொடுக்க தவறியுள்ளீர் எனக் கருதி உமக்கெதிரான குடியியல் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இவ் அறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

"மன்றின் கட்டளைப்படி"

ச.க.அமல் நிக்சன்,
வழ/சட்டத்தரணி,
மாவட்ட மேல், மேன் முறையீட்டு மன்று,
கிளிநொச்சி.

பொ.சுப்பிரமணியம்,
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
பளை (யாழ்ப்பாணம்).

(47527)(32-16)



# மக்கள் முகம்



நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட அப்பையா தேவசகாயம் அவர்களுக்கு 'கலாநிதி' என்ற கௌரவப்பட்டம் 05.02.2006 இல் கொழும்பில் வழங்கப்பட்டது.

இப்பட்டத்தினை வீரக்கலைகளுக்குரிய ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகமும் ஐக்கிய அமெரிக்க சர்வதேச Complimentary Medicine சர்வகலாசாலையும் இணைந்து வழங்கியுள்ளன.

International University for Martial Arts Japan affiliated to International Univeristy for complimentary Medicines U.S.A.)

இவர் லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் இணை ஸ்தாபகரும் தற்போதைய தர்மகர்த்தா சபைத் தலைவருமாவார்.

உலக சைவ மகா சபையின் பிரித்தானியக் கிளைத் தலைவரும் பிரித்தானிய இந்துக் கோயில்களின் ஒன்றியத்தின் தற்போதைய தலைவரும் இவராவார்.

புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து தமிழரது மதம், கலை, கலாசாரம், மொழி ஆகியவை மங்கிப் போகாமல் வளர்த்துவரும் சமூக சேவையாளர்கள் பட்டியலில் ஒருவராகக் கணித்து இக் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

(ஐ)



இணுவில் மேற்கு, எஸ்.சண்முககுமார் (S.L.P.S., B.A. Sc. Td, Dip in Ed. M.E.D.) 'வித்தியா விஜயஸ்ரீ' என்ற சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் இணுவில் மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் நீண்டகாலமாக அதிபராகக் கடமையாற்றி அண்மையில் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் அதிபராகப் பதவியேற்றுள்ளார். இவர் சமய, சமூக, கலாசார மேம்பாட்டிற்காக உழைத்து வருபவர். இவர் இணுவில் அறிவாலயத்தின் செயற்குழு உறுப்பினராவார். அத்துடன் இவர் சிறந்த கணித ஆசானாவர்.

(ஐ)

# நீத்தார் நயப்புரை

## அராஜகங்களைக் கண்டு வெகுண்டெழுந்தவர்



அமரர் ஸ்ரீமான் தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை (T.V. மாஸ்ரர்), நீர்வேலிக் கிராமத்தில் 22.01.1925 இல் பிறந்தவர். இவர் கல்வியை அத்தியார் இந்துக் கல்லூரியில் பயின்று அதே பாடசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்று கண்டி, பத்தைமேனி போன்ற இடங்களில் சேவையாற்றி ஈற்றில் நீர்வேலி C.C.T.M. பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். ஓய்வின் பின் நொத்தாரிசு பரீட்சையில் தோற்றி சித்திபெற்று நொத்தாரிசாகப்பணியாற்றினார்.

இவரின் வாழ்க்கைக் காலம், நீர்வேலிக் கிராமம் மிகுந்த பயன்பெற்ற காலமாகும். ஏழைகளின் தொண்டராகத் திகழ்ந்தார். புதிய வீதிகளை உருவாக்கியமை, கிராம மக்களின் பிணக்குகளைத் தீர்த்தமை, இலவசமாகக் காணிகளை நிலஅளவை செய்தமை, பிரேத ஊர்வல வண்டி ஒன்றை முன்னின்று செப்பனிட்டமை, நீர்வேலி வடக்கு ஸ்ரீ கணேசா சனசமூக நிலையத்தை ஸ்தாபித்துத் தொடர்ந்து தனது செலவில் புதினப்பத்திரிகைகளை வழங்கியமை, ஏழைப்பிள்ளைகளின் கல்விக்காக நிதியுதவி செய்தவர், கோயில்களில் பஜனை மற்றும் பயன் கூறுதல் என்பவற்றை சிறப்பாக நிறைவேற்றியவர். ஊரில் எங்கு துன்பமோ அங்கு அவரைக் காணலாம்.

எளிமையானவர், உயர்ந்த பண்பாளன், அடுத்தவர் மனங்களை நோகடிக்காதவர். அராஜகங்கள் தோன்றும் போது வெகுண்டெழுந்தவர். சிறுபிள்ளைகள் தொட்டு முதியோர் வரை T.V. மாஸ்டர் என அழைக்கப்பட்டவர். இறுதிவரை கல்விப்பணி, சமயப் பணி, பொதுப் பணி எனச் சிறப்பாக செயற்பட்ட உத்தமர் மறைந்து ஓராண்டு ஆகின்ற இந்நாளில் அவரின் நினைவுகளை மீட்டுப் பார்ப்பதில் நீர்வேலிக் கிராமம் பெருமை கொள்கின்றது.

**வே.கா.கணபதிப்பிள்ளை.**

# தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

வடக்கு-கிழக்கு மாகாண கைத்தொழில் திணைக்களம் கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் ஊடாக நடத்தவுள்ள மின்னிணைப்பு, குழாய் இணைப்புப் பயிற்சி நெறிகளை வழங்குவதற்கான போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியானவர்கள் தமது சுய விவரக் கோவையை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர், கரவெட்டி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும்-

இது தொடர்பான மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

* * *

மீன்பிடி மற்றும் நீர்வள அமைச்சு கரையோர வளங்கள் முகாமைத்துவத் திட்டத்திற்கு தகவல் அதிகாரியை (தமிழ்) தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரி 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இதழியல், ஊடகத்துறை டிப்ளோமா பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தகைமையுடையவராகவும் இருக்கவேண்டும்.

அத்துடன் இதழியல் தொழில்நுட்பத் துறையில் 5 வருடகால அனுபவம் உள்ளவராகவும் இருக்கவேண்டும்.

தகுதியானவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் 'திட்டப் பணிப்பாளர், கரையோர மூலவள முகாமைத்துவத்திட்டம், இல. 10, முதலாம் மாடி, புதியசெயலகம், மாளிகாவத்தை, கொழும்பு - 10'' எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

* * *

யாழ்.மத்திய கல்லூரியில் கணனிப் பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளன.

பாடசாலைக் கல்வியை முடித்த, பாடசாலையை விட்டு இடைவிலகிய ஆண், பெண் இரு பாலாரும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரர் 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

தகுதியானவர்கள் பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

* * *

வடக்கு - கிழக்கு மாணாகத்திற்குட்பட்ட கிராமங்களில் உள்ள இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் மேசன், தச்சு வேலைப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை வடக்கு-கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

மூன்று மாதகாலத்திற்கு வழங்கப்படவுள்ள இப் பயிற்சிநெறியின் போது பயிற்சியாளருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.

மேசன், தச்சுத் தொழிலாளர்களுக்கு தற்போது பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமையால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக்காலத்தில் பயிற்சியாளர்களுக்கான சீருடை வழங்கப்படவுள்ளதுடன் பயிற்சி முடிவில் பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ்களும், அவர்கள் தொழில்வாய்ப்பில் ஈடுபடுவதற்கு வசதியாக உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

பயிற்சிபெற விரும்புவோர் தமது மாவட்டங்களிலுள்ள வடக்கு-கிழக்கு வீட மைப்பு மீள் நிர்மாணத்திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# நூல் வரிசை



**நூல்** : நெட்டிலிப்பாய் பிள்ளையார் கும்பாபிஷேக மலர்
**ஆசிரியர்** : செல்லப்பா நடராசா
**வெளியீடு** : ஆலய பரிபாலன சபை

எழில் கொஞ்சும் இயற்கைச் சூழலோடு அமைந்த இராஜகோபுரத்துடன் கூடிய அழகிய மணிமண்டபமும் வர்ணத்துடன் அட்டையில் மிளிர்வது இவ்வாலயத்தின் அடையாளத்தை மனதில் ஏற்படுத்தி நிற்கின்றது. அடுத்தாற்போல் எந்நாளும் அருள் பாலித்து அடியார்களை வாழ்வித்துக் கொண்டிருக்கும் ஆதிமூல கணபதியின் எழிற்கோலம் பார்ப்போர் மனதை அவன்பால் ஈர்த்து நிற்கின்றது.

திருக்கோயில்கள், மக்கள் வழிபட்டு ஆன்ம ஈடேற்றம் பெறுவது மட்டுமல்ல; மக்கள் ஒன்று கூடி நற்கருமங்கள் ஆற்றி இன்புற்று வாழ்வதற்கும் களமாக அமைவ[illegible]த நூலாசிரியர் நூல் நுழைவாயிலில் இயம்பி இருப்பது சிறப்பான கருத்தமைந்த அ[illegible]ாகும்.

இந்நூலை அலங்கரிப்பவையாகவும், படிப்போர் மனதை விநாயகரி[illegible]ஈர்க்க வல்லவை கவிஞர் இ.முருகையனின் பதிகமும் அகவலும் இதில் ஒன்று என்ற[illegible]கையாகாது.


போராசிரியர் எஸ்.சிவலிங்கராசா அவர்களின் ''யாழ்ப்பாண மரபு வழிக்கல்வி'' என்ற ஆய்வுக்கட்டுரை, மாணவர் எக்காலமும் தேடிகற்கக் கூடியதாக அமைந்துள்ளது.

நூலாசிரியர் திரு. செல்லப்பா நடராஜா அவர்களின் 'திருக்கோயிலே ஒரு கிராமமானது' என கோண்டாவிலை திருக்கோயில் அமைந்த ஊராகவே ஆதாரங்களுடன் காட்டியுள்ளார். மஹோற்சவம் நடைபெறும் ஆலயங்கள் முதல் சிறிய ஆலயங்கள் வரையுள்ள ஆலயங்களின் பெயர் விவரங்களைத் தேடிப் பட்டியற்படுத்தி உள்ளமை, ஆய்வுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு உறுத்துணையாக அமையும் எனலாம்.

ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்களின் 'நாவலரும் கோயிலும்' எனும் கட்டுரையும் வேறு ஆலயத்துடன் கூடிய நல்ல விடயங்களும் அமைந்துள்ளமை இம் மலரை மேலும் மெருகூட்டி நிற்கின்றன.

இவ்வாலயத்தின் பரிபாலன சபை முப்பதாண்டு நிறைவில் மகாகும்பாபிஷேக தினத்தைச் சந்தர்ப்பமாகக் கொண்டு இம்மலரை மணம் பரப்பி மலரச் செய்துள்ளமை பாராட்டுகளுக்குரியது.

**- இ.செந்திற்குமரன்**



**நூல்** : நிகழ்தகவுக் கோட்பாடுகள்
**ஆசிரியர்** : கலாநிதி செ.இளங்குமரன்
**வெளியீடு** : தென்னாசிய சமூக விஞ்ஞான நிதியம்

கலாநிதி செ.இளங்குமரனின் ''நிகழ்தகவுக் கோட்பாடுகள்'' என்னும் நூல் தென்னாசிய சமூக விஞ்ஞான நிதியத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது. புள்ளிவிவரவியல் எனும் கலையான்து சகல துறைகளிலும் ஊடுருவிப் பங்களிப்பதன் மூலம் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றுவரும் இன்றைய சூழலில், புள்ளிவிவரவியலுடன் தொடர்பான நூல்கள் இல்லையே என்ற குறைபாட்டை நீக்குவதாக இந்நூல் அமைந்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளராக விளங்கும் நூலாசிரியர் மிக நீண்ட காலக் கற்பித்தல் அனுபவம் வாய்ந்தவர். மாணவர் எவ்விடயப்பரப்பில் இடர்படுகின்றனர் என்பதை அனுபவ வாயிலாக அறிந்தவர். இவ்வகையில் நிகழ்தகவுக் கோட்பாடுகளைப் புரிந்து கொள்வதிலும் அதில் எத்தகைய இடர்பாடுகள் ஏற்படும் என்பதையும் ஆராய்ந்தறிந்து அவற்றை நீக்கும் விதமாக இந்நூலை எழுதியுள்ளார்.

க.பொ.த.உயர்தரத்தில் வணிகப்புள்ளி விவரவியல், இணைந்தகணிதம் என்பவற்றைக் கற்கும் மாணவர்களிற்கும் மற்றும் வணிகமாணி (உள்வாரி/வெளிவாரி) பகுதி I/II, விஞ்ஞானமாணி (புள்ளிவிவரவியல்), கலைமாணி (பொருளியல்) ஆகிய கற்கை நெறிகளைக் கற்கும் மாணவர்களுக்கும் உயர்தொழில் நுட்பக் கல்லூரியில் கற்கும் HNDA / ETE மாணவர்களுக்கும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிலும் மாணவர்களுக்கும் இந்நூல் நன்கு பயன்படக் கூடியது. இந்நூல் மாணவர்களுக்கு மட்டுமல்ல கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாகும். பாடசாலை மாணவர் முதல் பல்கலை[illegible]ழக மாணவர் வரை பயன்பெற வேண்டுமென்பதே இந்நூலாசிரியரின் நோக்கமாகும்.

இந்நூலின் முதல் இரு அலகுகளும் (அலகு 1, 2) க.பொ.த (சா/த) முதல் உ/த மாணவர்களுக்கும் அடுத்த இரு அலகுகளும் (அலகு 3,4) க.பொ.த.([illegible]) முதல் பல்கலைக் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் இறுதி இரு அலகுகளும் (அலகு 5,6) பல்கலை. / உயர் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கும் மாணவர்களுக்கும் ஏற்ற வகையில் எழுதப்பட்டுள்ளது. படித்துப் பயன்பெறுவது குறித்த மாணவர்களுக்குரிய பணியாகும்.

**- ஏ.ஸ்ரனிஸ்லாஸ்.**



**நூல்** : கல்வியியல் சுற்றறிக்கைகளின் தொகுப்பு
**ஆசிரியர்** : சி.சரவணபவானந்தன்
**வெளியீடு** : இ.த.சங்கம், கொழும்பு

ஆசிரிய வாண்மையை விருத்தி செய்வது ஒவ்வொரு ஆசிரியரதும் அவர்களின் அமைப்புகளினதும் முக்கிய கடப்பாடாகும். வாண்மை விருத்தி குறித்த அமர்வுகளை ஒழுங்கு செய்வதில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க கொழும்புக் கிளைகள் முக்கிய பணிகளைச் செய்துள்ளதை உணரமுடிகின்றது.

கல்வி முகாமைத்துவச் சுற்றறிக்கைகளின் தொகுப்பு 2002 இல் வெளியிடப்பட்டு நாடு முழுவதும் ஆயிரக் கணக்கில் விநியோகிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. இதற்கு வாய்ப்பளித்த வாண்மை விருத்தி வழிகாட்டல் அமர்வு ஒழுங்கமைப்புக் குழு மீண்டும் 2006இல் கல்வியியல் சுற்றறிக்கைகளின் தொகுப்பு நூலொன்றின் வெளியீட்டில் வெற்றி கொண்டுள்ளது. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. சி.சரவணபவானந்தன் மிகுந்த சிரமங்களுடன் தொகுப்பு நூல் வெளியீட்டுக்குப் பணியாற்றியுள்ளார். ஆசிரியர்கள், அதிபர்கள் ஒன்றுபடுவதன் மூலம் பலம் பெற்றுப் பலரும் பயனடையலாம் என்பதை தொகுப்பு நூல் வெளியீட்டின் மூலம் திரு.சி.சரவணபவானந்தன் உறுதிப்படுத்தியுள்ளார்.

கல்வியியல் சுற்றறிக்கைகளின் தொகுப்புநூல் 2006 ஆம் ஆண்டின் தை மாதத்தின் சுற்றறிக்கைகளையும் உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பாவனையாளர்களின் உபயோகத்துக்கு வசதியாக தலையங்கமிடப்பட்டு அதனடிப்படையில் பொருளடக்கம் தயாரிக்கப்பட்டுள்ளது. கல்வி முகாமைத்துவச் சுற்றறிக்கைகளின் தொகுப்பு நூல் (2002 இல் வெளியிடப்பட்டது) தற்காலப்படுத்தப்படுகையில் ஏறக்குறைய 70 பக்கங்கள் நீக்கப்பட்டதுடன் மேலும் 220 பக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் கற்பித்தல் தொடர்பான அறிவினைக் கொண்டிருப்பது மட்டும் போதுமானதன்று. உரிமைகள், சலுகைகள் பற்றியும் விளங்கி இருத்தல் வேண்டும். ஆசிரியர் நல்ல மனப்பாங்கினைக் கொண்டவராகும் போது, அவரின் மாணவர்கள் மட்டுமன்றி சொந்தப் பிள்ளைகளும் நன்மையடையும் வாய்ப்புக் கிட்டுகின்றது. இன்றைய தகவல் யுகத்தில் உச்ச அளவில் தகவல் பசியைத் தீர்த்துக் கொள்ளும் ஆசிரியர்களே கல்வியாளர் மத்தியில் பெறுமதிமிக்கவராக நோக்கப்படுவார்கள். பாடநெறிகளைப் பயின்று, பட்டங்களையும் சான்றிதழ்களையும் பெற்றவர்களை விட நல்ல மனப்பாங்கு கொண்ட அதிகாரிகள் உயர்ந்த கல்வி அடைவு மட்டத்தை வெளிப்படுத்த உதவியமை உறுதிப்படுத்தப்படுகின்றதை உணர்கின்றோம். கல்விமுறைமை சார்ந்த ஒழுக்க விதிகளை அறிந்து ஒழுக்க நெறிகளை பின்பற்றச் செய்து நல்லதொரு சமுதாயத்தை கட்டி வளர்க்க ஆசிரியர்களின் பணி எப்பொழுதும் தேவைப்படுகின்றது.

கல்வியியல் சுற்றறிக்கைகளின் இத் தொகுப்பானது பயனாளிகளுக்கு ஆசிரியத் தொழில் வாண்மைத் தொழில் என்பதை உணரவும் வாண்மைத் தொழிலுக்கு இருக்க வேண்டிய பண்புகளை வளர்க்கவும் தமக்கிருக்கும் உரிமைகளை உறுதிப்படுத்தவும் உதவும் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

**- இ.செல்வநாயகம்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
28.06.1935



மறைவு
02.02.2006

## அமரர் சரஸ்வதி வேலுப்பிள்ளை

அன்பின் உருவமாய்
பண்பின் சிகரமாய்
ஒழுக்கத்தில் உத்தமியாய் வாழ்ந்த
நம் தாயார்
நம் இல்லத்தின் திருமகளாய் வாழ்ந்து
நல்லவர்களில் நல்லவளாய்
நம் மண்ணில் வாழ்ந்து
தம் மாண்புமிகு வாழ்க்கையை நீத்து
அமரர்களில் ஒருவராய் வாழ இப்பூவுலகை
விட்டு விண்ணுலகம் சென்றார்.
அவர் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்கா நினைவுடன்:
- குடும்பத்தினர்.

கலைவாணி வீதி,
சித்தன்கேணி.

(47353) (39-11-15-42)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்
30.09.1928



ஆண்டவன் அரவணைப்பில்
02.02.2006

## அமரர் நாகலிங்கம் சண்முகநாதன்

[இ.போ.ச.முன்னாள் சாரதி- யாழ்ப்பாணம்]


2006.02.02 வியாழக்கிழமை இறைபதம் எய்திய எமது தந்தையின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவி செய்தோருக்கும் துயரம் பகிர்ந்து கொண்டோருக்கும் மரணச்சடங்கில் கலந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி மூலம் இரங்கல் செய்தி தெரிவித்தோருக்கும் ஆறுதல் கூறிய அனைத்து நெஞ்சங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (04.03.2006) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மற்றும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- பிள்ளைகள்.

நீர்வேலி கந்தசாமிகோயிலடி,
நீர்வேலி தெற்கு.

(47365) (39-11-15-42)

# ஒன்றரை மாத ஓயாத நினைவும் நன்றியொடு அந்தியேட்டி அழைப்பும்



எங்கள் குல விளக்கு ஏற்றமுறு பூவரும்பு
தன்னிலவை எங்களுக்காய் தந்து மகிழ வைத்து
தான் தேய்ந்து போன தங்கப் பெருநிலவு
முற்றத்து மல்லிகையாய் முகிழ்ந்து மணம் பரப்பி
இற்றைக்கும் இதயத்துள் இனிக்கின்ற செங்கரும்பு
காலத்தால் நாங்கள் கடன் தீர்க்க முடியாத
ஞாலத்தில் உருத்தந்து உதவி நின்ற
எங்கள் குடும்பத்தில் எழில் சேர்த்த ஒளித்தீபம்
மங்காப் பெருமை எல்லாம் மலரவைத்த - மனித்தீபம்
அணைந்துவிட்ட சோகத்தில் அலறித் துடிக்கையிலே
இனமென்றும் மதமென்றும் எதுவுமுளம் கொள்ளாது
ஆறுதலைத்தந்து ஆன துணையாயிருந்து
வந்து துயர் கேட்டு நலம்பேணி உணவுதந்து
தந்தியிலும் தொலைபேசிச் செய்தியிலும் ஆதரித்து
இனிவரும் நாளதனில் வருமந்த
அந்தியேட்டி கிரியைக்கும்
ஆவன யாவற்கும்
வந்து சிறப்பிக்கும் அன்புளங்கள் அத்தனைக்கும்
எய் நன்றி, தொடர்நன்றி, செய்நன்றி மறவோம்.

தனிப்பட்ட அழைப்பு தவறுதலாகக் கிடைக்கப் பெறாத அனைத்து எம் தந்தையின் அன்புசார் உள்ளங்கள், யாவரையும் இதனையே தனிப்பட்ட அழைப்பாக பெருந்தன்மையுடன் ஏற்று, அவரின் இல்லத்தில் (05.03.2006) காலை 5 மணிக்கும் மதியம் 11.30 இற்கும் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு மிக மிக தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம். தனிப்பட்ட அழைப்பை உங்கள் கைகளில் சேர்க்க முடியாமைக்காக வருந்துவதோடு *என்றும் எம் அப்பாவின் ஆத்மாவின் வரவை எதிர்பார்த்துப் பிரார்த்திக்கும்.*

'மதனகிரி'
அத்தாய், அல்வாய்.

- குடும்பத்தினர்.

(சி.48105) (39-11-15-42)

## அமரர் தமோதரம்பிள்ளை சுந்தரலிங்கம் (ராசா)

நிஜமாய் 18.09.1952 நித்தியமாய் 20.01.2006

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில்

# 7 லட்சத்து 19 ஆயிரம் பேர் இம்முறை வாக்களிக்கத் தகுதி!

அச்சுவேலி,மார்ச்4

யாழ். தேர்தல் மாவட்டத்தில் 20 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 7 லட்சத்து 19 ஆயிரத்து 38 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

யாழ். மாநகர சபைக்கான 29 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 96 ஆயிரத்து 702 வாக்காளர்களும், சாவகச்சேரி நகரசபையின் 15 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 17 ஆயிரத்து 322 வாக்காளர்களும், பருத்தித்துறை நகரசபைக்கு 12 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 13 ஆயிரத்து 324 வாக்காளர்களும், வல்வெட்டித்துறை நகரசபைக்கு 12 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 11 ஆயிரத்து 787 வாக்காளர்களும் தகுதிபெற்றுள்ளனர்.

நெடுந்தீவுப் பிரதேச சபைக்கு 12 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 4 ஆயிரத்து 447 வாக்காளர்களும், வேலணைப் பிரதேச சபைக்கு 15 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 31 ஆயிரத்து 371 வாக்காளர்களும், ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்கு 07 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 17 ஆயிரத்து 138 வாக்காளர்களும் தகுதி பெற்றுள்ளனர்.

காரைநகர்ப் பிரதேச சபைக்கு 7 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 15 ஆயிரத்து 416 வாக்காளர்களும், வலி.மேற்குப் பிரதேச சபைக்கு 19 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு 38 ஆயிரத்து 640 வாக்காளர்களும் -

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு 21 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 45 ஆயிரத்து 89 வாக்காளர்களும், வலி.வடக்

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

குப் பிரதேச சபைக்கு 27 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 59 ஆயிரத்து 78 வாக்காளர்களும், வலி.தெற்குப் பிரதேசசபைக்கு 21 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 46 ஆயிரத்து 192 வாக்காளர்களும், வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு 27 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 58 ஆயிரத்து 34 வாக்காளர்களும், வடமராட்சி தென்மேற்குப் பிரதேச சபைக்கு 24 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 44 ஆயிரத்து 999 வாக்காளர்களும் தகுதிபெற்றுள்ளனர்.

பருத்தித்துறைப் பிரதேச சபைக்கு 12 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 32 ஆயிரத்து 577 வாக்காளர்களும், சாவகச்சேரிப் பிரதேச சபைக்கு 20 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 44 ஆயிரத்து 700 வாக்காளர்களும் நல்லூர் பிரதேச சபைக்கு 16 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 35 ஆயிரத்து 638 வாக்காளர்களும், கரைச்சிப் பிரதேச சபைக்கு 25 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 67 ஆயிரத்து 125 வாக்காளர்களும், பூநகரிப் பிரதேச சபைக்கு 13 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 12 ஆயிரத்து 744 வாக்காளர்களும், பச்சிலைப் பள்ளி(பளை)ப் பிரதேச சபைக்கு 12 பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கு 9 ஆயிரத்து 585 வாக்காளர்களும் வாக்களிக்கவுள்ளனர்.

(த-11)

## கூடியபுள்ளிகள் பெற்ற மாணவருக்கு கௌரவம்

யாழ்ப்பாணம்,மார்ச்4

வடமராட்சி கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் கடந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 100 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப் படவுள்ளனர்.

இந்த மாணவர்களுக்குத் தமிழீழ வைப்பகம் ஊடாக ஒரு தொகைப் பணம் வைப்பிலிடப்பட்டு சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளைத் தமிழீழ கல்[illegible] கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமா[illegible] மற்கொண்டுள்ளார்.

மேற்படி பிரதேசத்தின் [illegible]சாலை அதிபர்கள் தமது பாடசாலை[illegible] 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் விவரங்களைக் கோட்டக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி கேட்டுள்ளார்.

(த-118-173-202)

## வேம்பிராய் மயானத்தில் கழிவுகள் கொட்டப்படுவதால் அசௌகரியம்

தென்மராட்சி,மார்ச்4

வேம்பிராய் பொதுமயானப் பிரதேசத்தில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் பொதுமக்கள் இதனைப் பயன்படுத்துவதில் பலசிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று கூறப்படுகின்றது.

வீடுகளில் தறிக்கப்படும் பிரயோசனமற்ற மரக்குற்றிகள், சேதமடைந்த வீடுகளில் இருந்து அப்புறப்படுத்தப்படும் கற்குவியல்கள் மற்றும் கழிவுப் பொருள்களே இவ்வாறு இந்த மயானப் பகுதியில் கொட்டப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பாக கடந்த மாதம் சாவகச்சேரிப் பிரதேச சபையில் நடைபெற்ற சனசமூக நிலையப் பிரதிநிதிகள் சந்திப்பில் எடுத்துக்கூறப்பட்டது.

மக்கள் குடியிருப்பு அற்ற பிரதேசத்தில் இம்மயானம் அமைந்திருப்பதனால் கழிவுப் பொருள்களை இரவோடு இரவாக சம்பந்தப்பட்டோர் கொண்டுவந்து கொட்டுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுமன்றங்களின் பிரதிநிதிகள் இவ்விடயத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அக்கலந்துரையாடலில் ஆலோசனை கூறப்பட்டது.

சரசாலைப் பிரதேசம், மீசாலை கிழக்கு, வடக்குப் பிரதேசம், வேம்பிராய், மந்துவில் புத்தூர்ச் சந்தி ஆகிய பிரதேச மக்கள் பயன்படுத்தும் பிரதான மயானம் வேம்பிராய் மயானம் என்பது குறிப்பிடத்தக்கது. (தீ-122)

## நல்லூர் பிரிவில் நிவாரணத்தை பெற்றுக்கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்4

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நிவாரணம் பெறுவோருக்கான நிவாரணப் பொருள்கள் அங்குள்ள நல்லூர், யாழ்ப்பாணம், தெல்லிப்பழை ஆகிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளூடாக வழங்கப்பட்டு வருகின்றன.

நிவாரணம் பெறுவோர் தமது நிவாரணங்களை நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் கேட்டுள்ளார்.

(த-202)

## திறந்த பல்கலை. சிங்களப் பரீட்சை யாழ். பிராந்திய நிலையத்தில்!

அச்சுவேலி,மார்ச்4

திறந்த பல்கலைக்கழகத்தின் சிங்கள மொழிக் கற்கைநெறிக்கான பரீட்சைகள் யாழ். பிராந்திய நிலையத்தில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என யாழ். பிராந்திய நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ஏ.ஞானேந்திரா அறிவித்துள்ளார்.

யாழ். பிராந்திய நிலையத்தில் பதிவு செய்த 95இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு சிங்களமொழிக் கற்கை நெறிக்கான பரீட்சைகள் கொழும்பில் நடைபெறவிருப்பதாக திறந்த பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதி அட்டை அனுப்பிவைத்திருந்தது.

யாழ்ப்பாணம் மாணவர்கள் கொழும்புக்குச் சென்று பரீட்சை எழுதுவதில் உள்ள சிரமங்கள் மற்றும் வசதிக்குறைவுகளையும் எடுத்துக்கூறி இந்தப் பரீட்சைகளை யாழ். பிராந்திய நிலையத்தில் நடத்துமாறு வலியுறுத்தப்பட்டிருந்தது.

மாணவர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு பரீட்சையை யாழ். பிராந்திய நிலையத்தில் நடத்துவதற்குத் திறந்த பல்கலைக்கழக நிர்வாகம் ஒப்புதல் அளித்திருப்பதால், பரீட்சைகள் இன்றும் நாளையும் திகதிகளில் யாழ். பிராந்திய நிலையத்திலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(த-11)

## இன்பருட்டி - சக்கோட்டை வீதி நவீன முறையில் புனரமைப்பு

வடமராட்சி,மார்ச்4

கடந்த 25 வருடகாலமாகத் திருத்தப்படாது மோசமாகச் சேதமடைந்திருந்த இன்பருட்டி - சக்கோட்டை வீதி மிக நவீன முறையில் - 2 கோடி 75 லட்சம் ரூபா செலவில் திட்டச் சேவைகளுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் புதிதாக அமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

சுமார் இரண்டு மைல் நீளமான இந்த வீதிக்கு முதலில் மண், க[illegible] போடப்பட்டு பின்னர் கம்பிகள் இணை[illegible] இருபது அங்குல உயரம் கொண்டதாகக் கொங்கிறீட் இடப்பட்டு தார் ஊற்றி இ[illegible]வீதி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வீதியின் இருமருங்கிலும் உள்ள குடியிருப்பாளர்கள், காணிச் சொந்தக்காரர்கள் வீதி விஸ்தரிப்புக் கருதித் தேவையான நிலத்தை வழங்கி உதவுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

குடியிருப்புகள் ஊடாக கடற்கரை வீதியை இணைக்கும் இவ்வீதி, போர்க்காலத்தில் கரையோர மக்களின் போக்குவரத்துக்கு மிகவும் பேருதவியாக இருந்துவந்தது.

கரையோர மக்களுக்கு மாத்திரமன்றி விவசாயிகள், குடிசைக்கைத்தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து மக்களும் அதிகமாகப் பயன்படுத்தும் வீதிகளில் இதுவும் ஒன்று எனப் பருத்தித்துறைப் பிரதேச சபை புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.

(த-173)

## வீட்டில் திருட்டுப்போன சைக்கிள் கள்ளுத்தவறணையில் சிக்கியது!

பண்டத்தரிப்பில் சம்பவம்

வலி.தென்மேற்கு,மார்ச்4

பட்டப்பகல் நேரத்தில் வீடு ஒன்றில் விடப்பட்டிருந்தபோது திருடப்பட்ட சைக்கிள் ஒன்று கள்ளுத்தவறணையில் வைத்து மீட்கப்பட்ட சம்பவம் பண்டத்தரிப்பில் நடைபெற்றுள்ளது.

இந்தச் சைக்கிளைத் திருடிச் சென்ற நபர் பண்டத்தரிப்பு - சண்டிலிப்பாய் வீதியிலுள்ள கள்ளுத்தவறணை ஒன்றின் முன்பாக நிறுத்திவிட்டு தவறணைக்குள் சென்றார் என்றும் -

இது பற்றி தகவல் அறிந்த சைக்கிள் உரிமையாளரும் அவரது உறவினரும் கள்ளுத் தவறணைக்கு முன்பாக சைக்கிளுக்கு அருகில் மறைந்திருந்த திருடனைக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர் என்றும் கூறப்பட்டது.

சைக்கிள் திருடிய நபர் பிரான்பற்று வயல் வெளிப்பக்கமாகத் தப்பி ஓடிச்சென்றபோது பொதுமக்கள் அவரைத் கலைத்துப் பிடித்து நையப்புடைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-135)



மணற்காட்டில் ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற சாரதிகளுக்கான சாரதிப் பத்திரம் அண்மையில் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மணற்காட்டுப் பிரதேசத்தில் 'கியூடெக்' நிறுவனத்தால் சாரதிகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதில் சாரதிப் பயிற்சி பெற்று வெளியேறிய சாரதிகளுக்கு 'கியூடெக்' நிறுவன இணைப்பாளர் அருட்திரு.ஜெயக்குமார் அடிகள் தலைமையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்ட நிகழ்வில் எடுக்கப்பட்ட படம்.

(படம்: கரவெட்டிச் செய்தியாளர்)

## மானிப்பாய் தபாலகம் நிறுவ பிரதான வீதியில் இடம் தெரிவு

யாழ்ப்பாணம்,மார்ச்4

மானிப்பாய் பகுதிக்கான புதிய தபால் அலுவலகம் அமைய வேண்டிய இடத்தினை வடமாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபர் பார்வையிட்டு அங்கீகரித்துள்ளார் - என்று மானிப்பாய் தபால் அலுவலக இணைப்புக் குழுவின் தலைவர் சட்டத்தரணி இ.வசந்தசேனன் தெரிவித்தார்.

நீண்டகாலமாகத் தற்காலிக கட்டடத்தில் மானிப்பாய் தபால் அலுவலகம் இயங்கி வந்தது. பிரதான இடத்தில் காணியில்லாத காரணத்தினால் அதனைப் புனரமைப்புச் செய்யமுடியாத நிலை காணப்பட்டது.

தற்போது மானிப்பாய் பிரதான வீதிக்கு அருகில் புதிய தபால் அலுவலகம் அமைப்பதற்கான இரண்டு பரப்புக் காணி கொள்வனவு செய்யப்படவுள்ளது. அதற்கான இடமே தற்போது பார்வையிட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-185)

## பிள்ளைநேயப் பாடசாலை குறித்து அச்சுவேலியில் இருநாள் செயலமர்வு

அச்சுவேலி,மார்ச்4

பிள்ளை நேயப் பாடசாலை தொடர்பான இரண்டு நாள் செயலமர்வு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

யாழ். கல்வி வலயத்தின் வள ஆளணியினால் பிள்ளைநேயப் பாடசாலை தொடர்பான அறிவூட்டல் செயலமர்வு ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றது.

அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரியில் நடைபெறும் செயலமர்வுக்கு அயற் பாடசாலை ஆசிரியர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

(த-11)

## திறப்பு விழாவும் இல்லமெய்வன்மைப் போட்டியும்

கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ஐரோப்பாவில் பரந்து வாழும் இருபாலை கிழக்கு மக்களின் பெருமுயற்சியால் யா/இருபாலை சீ.சீ. தமிழ் கலவன் பாடசாலைக்கு கொள்வனவு செய்து வழங்கப்பட்ட விளையாட்டு மைதான திறப்பு விழாவும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியும் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அதிபர் திருமதி கமலாவதி சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன. இவ் வைபவத்தில் இளைப் பாறிய வங்கி அதிகாரி ப.குமாரசிங்கம் மைதானத்தைத் திறந்து வைப்பார். மெய்வன்மைப் போட்டிக்கு பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கல்விக் கோட்டப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும், A.M.T.ரான்ஸ்போட் நிறுவன உதவி முகாமையாளர் K.அட்ஷயனும், J.P.தங்கவடிவேலுவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யா/இருபாலை சீ.சீ. த.க. பாடசாலை - கோப்பாய்.

## உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 4

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியால பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஜீ.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணிதொடக்கம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தொடக்கவுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராஜாவும் கருத்துரைகளை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். ஆனந்தன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

கலந்துரையாடல்களை திருமதி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், திருமதி கு.கிருஷ்ணராசா, நா.நரேந்திரா ஆகியோர் நடத்துவர்.

இக்கருத்தரங்கு நிகழ்வில் அனைத்து அயல் பாடசாலை ஆசிரியர்களையும் மாணவர்களையும் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (3-202)

## படையினர் ஏற்பாட்டில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணத்தில் பல்வேறு கிராமங்களிலும் இராணுவத்தினரின் ஏற்பாட்டில் நடமாடும் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் 55 ஆவது படையணியினரால் நிர்வகிக்கப்படும் 9 கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கும் 52ஆவது படையணியினால் நிர்வகிக்கப்படும் சில கிராமங்களின் மக்களுக்கும் இந்த மருத்துவசேவை நடத்தப்பட்டது.

இதில் இராணுவ வைத்தியசாலையின் இரண்டு விசேட வைத்திய அதிகாரிகளும் 10 வைத்திய அதிகாரிகளும் மருத்துவசேவையிலீடுபட்டனர். இவ் வைத்திய சேவையில் ஆயிரத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்டு பயன் பெற்றனர் - இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-202)

## நினைவலைகள்

ஓராண்டில் | ஏழாம் ஆண்டில்



அமரர்
வேலன் பிள்ளையான்
(ஓய்வூதியர் இலங்கை புகையிரத பகுதி)



திருமதி
பிள்ளையான் சரஸ்வதி

1925.08.18 ← அன்னை மடியில் → 1932.05.14
2005.02.13 ← இறைவன் திருவடியில் → 1999.11.28
பூர்வபக்க பஞ்சமி ← திதி → ஷஷ்டி

அன்புடன் எங்களை வளர்த்து ஆளாக்கி வைத்த
அன்புத் தெய்வங்களே!
ஆண்டுகள் சென்றதையா
இன்முகம் காட்டி ஈர்ந்தளித்த நெஞ்சங்களே
உறவுகள் தேடுகின்றோம் ஊமை ஜென்மங்களாய்
எங்கும் தேடி ஏங்குகின்றோம் விழிகளில் நீர் சொரிய
ஆத்மா சாந்தியடைய விநாயகனை வேண்டி
பிரார்த்திக்கின்றோம்

*அமரத்துவம் எய்திய எங்கள் பெற்றோரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் இன்று (04.03.2006) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

"சரஸ்வதி வாசம்"
மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


# UNIVAC
## Software Engineering Park

சிங்கப்பூர் "சிஸ்ரம் கொம்பியூட்டர்" நிறுவனத்துடன் இணைந்து யுனிவெக் நிறுவனம் நடாத்தும் Software Engineering Course ற்கான வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. போட்டிப்பரீட்சைக்கு தோற்றி இதுவரை பதிவு செய்யாதவர்கள் 10-03-2006 இற்கு முன்னர் பதிவினை மேற்கொண்டு பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளவும்.

(First International Software Engineering Park in Jaffna)

213, Kasthuriyar Road, Jaffna T.P:077 6176476


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 - 05 - 1931



உதிர்வு 28 - 02 - 2001

அமரர்
### தளையசிங்கம் அழகரட்ணம்

*ஆண்டுகள் ஐந்து மறைந்தாலும்*
*அப்பாவே உங்கள் நினைவுகள்*
*என்றும் எம்மைவிட்டு அகலவில்லை!*
*ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.*

நல்லூர்,
யாழ்ப்பாணம். (47529)(26-19) -குடும்பத்தினர்.


# COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல 15, சிராம்பியடி வீதி (off Stanly Rd.)
Tele:- 021-222 8250 , 0777-222422

முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்
## Computerized Accounting
ACCPAC + Quick books premier + MYOB
ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்

**Course Contents**
- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- fore Casting
- Business Planning

80% Off

Tally Accounting Package
புதிய பிரிவுகள் ஆரம்பமாகிறது

வகுப்புக்கள் ஆரம்பம் :-
11/03/2006 :- 10.00-12.00
12/03/2006 :- 02.00-04.00



முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர
# Computer Hardware Engineering Course

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற
உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சி நெறி
◇Assembling ◇Upgrading ◇Troubleshooting ◇Fault Finding ◇Repairing ◇Servicing ◇Software Installation ◇Configuring ◇Introduction to Networking

**Course Contents**
- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- Internet & e-mail
- கம்பூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்பூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம் (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software, Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்பூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

Course Fee :- 2000/=
Free Study Pack & Drivers CD
வகுப்புக்கள் ஆரம்பம்:-
06/03/2006 :- 08.30-4.00

**Hard ware பயிற்சி**
- கணனிப் பாகங்களை இனம்காணும் முறை
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Network தொடர்பான அறிமுகம்
- Troubule Shooting / Maintenance.

**Software பயிற்சி**
- Operating System நிறுவும் முறை (Windows 98 / Windows XP)
- Software Install செய்யும் முறை
- Driver Installation செய்யும் முறை (Sound Card,Modam,VGA,TV Card,Printer)
- Troubule Shooting (File updating, Copying)

நன்மைகள்
- பாடநெறியின் இறுதியில் கம்யூட்டர் காட்வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- PI முதல் P4 வரையிலான கம்யூட்டர்களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirampiyadi lane , Jaffna.
Telephone :- 021-2228250 , 0777-222422

4ம், 5ம் திகதிகளில் ஏனைய அனைத்துக் கணனிக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 - 11 - 1938



மறைவு 08 - 03 - 2003

### வேலுப்பிள்ளை சின்னத்துரை

(முன்னாள் கிராமசேவை நிர்வாகஉத்தியோகத்தர்-சமாதான நீதவான்-சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர்)

திதி: 04 - 03 - 2006

*எங்கள் உயிருக்கு உயிரான அன்பான இராசுவே!*
*நீ எங்களை முந்திச்சென்று மூன்றாண்டுகள்ஆயினும்*
*எங்களில் மூண்டிருக்கும் துன்பச்சுமையதனைச்*
*சுமந்திட முடியாமல் தவிக்கின்றோம். எங்கள் துன்பச்*
*சுமை மாற்ற நீயல்லால் யார் உளர் எமக்கு?*
*உங்களின் அந்திமக்கடன் செய்ய நானிருக்கிறேன் என்பாய்.*
*எங்களை முந்திச்செல்ல மனம் வந்ததேனோ?*
*உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்...*

வாதரவத்தை,
புத்தூர்.

அண்ணன்: வே. தம்பையா
அக்காமார்: இ.பொன்னம்மா,க. பாக்கியம்
மைத்துனி: மனோன்மணி மகாலிங்கம்

# தெல்லிப்பழைக் கோட்டமட்டத்திலான கரபந்தாட்டம்: மகாஜனா, அருணோதயா, மெய்கண்டான் சம்பியன்

வலி.வடக்கு,மார்ச்4

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற கரபந்தாட்டப் போட்டியில் அருணோதயாக் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி, மெய்கண்டான் வித்தியாலயம் ஆகியன சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகள் மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

15 வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

ஐந்து செற்கள் கொண்ட இப்போட்டிகளில் முதல் மூன்று செற்களையும் மெய்கண்டான் வித்தியாலயம் வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. 3ஆம் இடத்தைத் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி வெற்றிகொண்டது.

17 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

ஐந்து செற்கள் கொண்ட இப்போட்டியில் மகாஜனக் கல்லூரி முதல் மூன்று நேர் செற்களையும் வெற்றி கொண்டு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. 3ஆம் இடத்தை அளவெட்டி அருணோதயாக் கல்லூரி பெற்றுக்கொண்டது.

19 வயதுப் பிரிவில் இறுதிப்போட்டியில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்லர் என்ற நிலையில் இரு அணிகளின் வீரர்களும் மோதிக்கொண்டனர்.

ஐந்து செற்கள் கொண்ட இப்போட்டியில் இறுதிவரை வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க முடியாத அளவுக்குப் போட்டி காணப்பட்டது.

ஆட்டமுடிவில் 3:2 செற்கள் கணக்கில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் வெற்றிபெற்றுச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. (3-86)




## வலி. வடக்கில் இன்று குழுநிலைப் போட்டிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்4

தெல்லிப்பழைப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான குழு நிலைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

ஆண்களுக்கான உதைபந்தாட்டம், பெண்களுக்கான துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், எல்லே ஆகிய போட்டிகள் இன்று சிறிபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும். (3-190)

## மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்4

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டியின் முன்னோடி நிகழ்வாகப் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் மரதன் ஓட்டப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (3-203)

## சென்றல் - ஸ்ரான்லி மோதல் சமநிலையில் முடிந்தது

யாழ்ப்பாணம், மார்ச்4

யாழ். மத்திய கல்லூரிக்கும் ஸ்ரான்லி கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற சிநேகபூர்வ ஒருநாள் கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 4 விக்கெட்டுகளை இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றது.

பிரசாத் ஆட்டம் இழக்காமல் 75ஓட்டங்களையும், செல்ரன் 58 ஓட்டங்களையும், சுதர்சன் 53 ஓட்டங்களையும் நவநீத் 48 ஓட்டங்களையும் பெற்றனர்.

சியாம்சன் 75 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் காண்டீபன் 44 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது.

சதீஸ் 85 ஓட்டங்களையும், மனோஜ் 42 ஓட்டங்களையும், சியாம்சன் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

சுதர்சன் 51 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளையும் சங்கீதன் 14 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (3-190)

## யாழ். வலய கூடைப்பந்தாட்டம் இறுதியாட்டங்கள் திங்களன்று

யாழ்ப்பாணம்,மார்ச்4

யாழ். வலய மட்டப் பாடசாலைகளுக்கு இடையில் - ஆண், பெண் இருபாலாருக்கும் இடையே - நடைபெற்று வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இடம்பெறவுள்ளது. இறுதியாட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

✱ பிற்பகல் 3 மணி - பெண்கள்: யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி. ✱ பிற்பகல் 4 மணி - ஆண்கள்: யாழ். மத்திய கல்லூரி அணி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி. (3-190)

## முரளிதரன் ஆயிரம் விக்கெட்டுகளைத் தாண்டினார்

சிற்றகொங்,மார்ச் 4

சர்வதேச கிரிக்கெட்டில் ஆயிரம் விக்கெட்டுகளைக் கடந்த முதல் வீரர் என்ற பெருமையை முத்தையா முரளிதரன் பெற்றுள்ளார்.

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் சிற்றிகொங்கில் நடைபெற்று வரும் டெஸ்ட் ஆட்டத்தில் முரளிதரன், காலித் மசூத்தின் விக்கெட்டை 'சோட்லெக்' திசையில் பிடிகொடுத்து ஆட்டமிழந்தவுடன் இந்த மைல்கல்லை அடைந்தார்.



இவர், ரெஸ்ட்டில் 593 விக்கெட்டுகளையும் ஒருநாள் ஆட்டங்களில் 411 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

முரளிதரன் டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் 49 ஆவது தடவையாக 5 விக்கெட்டுகளை இந்த ஆட்டத்தில் கைப்பற்றினார்.

ஆயிரம் விக்கெட்டுகளைக் கடந்த முரளிதரன் இலங்கைக்குப் பெருமை சேர்த்துள்ளார் என ரசிகர்கள் மகிழ்ச்சிவெளியிட்டனர். (3-203)



**புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியின் இல்லமெய்வன்மைப் போட்டியின் போது எடுக்கப்பட்ட படம்.**

**நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்லூரியின் பழைய மாணவரும், யாழ். பிரதம அஞ்சல் அதிபருமாகிய க. ஞானலிங்கம், கல்லூரி அதிபர் வ.ஆறுமுகம் ஆகியோருடன் ஏனைய விருந்தினர்களும் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். *(3-203)***

## யாழ். செயலகம் நடத்தும் கூடைப்பந்தாட்டம் சென்றலைட்ஸ், பல்கலை. அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,மார்ச்4

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டச் செயலக விளையாட்டவை நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற ஆட்டங்களில் சென்றலைட் வி.க. அணி, யாழ். பல்கலைக்கழக அணி ஆகியன வெற்றிபெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற சென்றலைட்ஸ் வி.க. அணிக்கும் உடுவில் சென்றல் வி.க. அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்றலைட்ஸ் வி.க. அணி எதிர்த்து விளையாடிய உடுவில் சென்றல் வி.க. அணியை 45:36 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றோர் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியும் ஜொலிஸ்ரார் வி.க. அணியும் மோதிக் கொண்டன.

யாழ். பல்கலைக்கழக வி.க. அணி எதிர்த்து விளையாடிய ஜொலிஸ்ரார் வி.க. அணியை 38:33 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டது. (3-190)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்4

யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் . பிரதம விருந்தினராகவும் - யாழ். இந்து மகளிர் கல்லூரியின் உப அதிபர் திருமதி மீனலோஜனி செல்லையா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (3-13)

✱ ✱ ✱

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பாடசாலை அதிபர் ம.ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் நா.சண்முகரத்தினம், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கல்விக்கோட்ட உதவிப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்வர். (3-13)

✱ ✱ ✱

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் பாடசாலை அதிபர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வித்தியாலய பழைய மாணவரும் தொழிலதிபருமான லயன் கு.கங்கைவேணியன் கலந்துகொள்ளவுள்ளார். (3-13)

✱ ✱ ✱

வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் பாடசாலை அதிபர் என்.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் ஊர்காவற்றுறை கிளை முகாமையாளர் என்.சச்சிதானந்தம் முதன்மை விருந்தினராகவும் - யாழ். அஞ்சல் அதிபர் க.சரவணபவானந்தன், இளைப்பாறிய ஆசிரியர் தி.செல்வராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (3-13)

✱ ✱ ✱

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியும், புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பார்வையாளர் அரங்கத் திறப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை அதிபர் ச.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இதில் பிரதம விருந்தினராகப் பாடசாலைக் கட்டட வேலைப் பகுதிப் பொறியியலாளர் கு.சிவபாலன் மற்றும் அவரது பாரியார் திருமதி வசந்திமாலாவும் சிறப்பு விருந்தினராகப் பழைய மாணவன் எஸ்.கலைச்செல்வனும் கலந்துகொள்ளவுள்ளனர்.(3-13)

✱ ✱ ✱

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின் இல்ல மென்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சு.சண்முககுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ். மாவட்ட முகாமையாளர் திருமதி ஞானச்செல்வி சிங்கேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் கல்விப் பிரிவு அபிவிருத்தி முகாமையாளர் அ.பேரின்பநாயகமும் கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற உடற்கல்வி ஆசிரியர் சி.தேவராஜாவும் கலந்துகொள்வர். (3-202)

✱ ✱ ✱

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சென்.பிலிப்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் கி.சிறீஸ்கந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தீவக கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரனும் சிறப்பு விருந்தினராக அல்லைப்பிட்டி கிராம உத்தியோகத்தர் சி.இரட்னேஸ்வரன், அல்லைப்பிட்டி பிரிவுப் பங்குத்தந்தை அருட்திரு. அன்ரன் அமல்ராஜ் ஆகியோரும் கலந்துகொள்வர். (3-203)

✱ ✱ ✱

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிக்கு வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 40 பாடசாலைகள் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளன. (3-173)

✱ ✱ ✱

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினர்களாக மன்னார் அரச அதிபர் வே.விஸ்வலிங்கம் திருமதி தேவேஸ்வரி விஸ்வலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (3-190)

✱ ✱ ✱

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவாந்துறை சென்.நிக்லஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) க.குமாரசாமி கலந்துகொள்வார். (3-14)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

லீசிங்கடன் முறையில் **180 CC** பல்சர் மோட்டார் சைக்கிள் (அலோவீல்), **Sharp woshing machine** 9500 ரூபா, ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டி, **SUN TV** சிம் காட்டுடன், **(X-SAT)** றிசீவர் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: **T.P.0776365950.** (47361)

**Sharp** எப்சன் இரு புறொஜெக்ரர் விற்பனைக்குண்டு. (20' திரை) தொடர்பு: **S.**சிறி, பிறவுண் றோட், கொக்குவில். **T.P.0777111400.** (47537)

53... இலக்கமுடைய செல் மொடல் கயஸ் வானும் 202... இலக்கமுடைய ஆட்டோவும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: க.புவனேந்திரன், வேம்போலை ஒழுங்கை, இணுவில் கிழக்கு, இணுவில். **T.P.0776204508.** (47540)

புதிய இரட்டைக்கதவு **Double Door** குளிர்சாதனப் பெட்டி விற்யனைக்குண்டு. 29,நாவலர் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம். **T.P.0779037585, 222 3688** (47503)

## விற்பனைக்கு / வாடகைக்கு

55, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் மேல்மாடி வீடு விற்பனைக்கு / வாடகைக்குண்டு. அத்துடன், அதே வீதியில் 5½ பரப்புக்காணி ஒன்றாகவும் பிரித்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.ராதாகிருஷ்ணன், 77, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (47298)

## காணி/ வீடு விற்பனைக்கு

சுன்னாகம் சந்திக்கு அருகில் கந்தரோடை வீதியில் (சுப்பிரமணியம் வீதியில்) 2¼ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0779673557. (47447)

## வீடுகள் விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு டிப்போவிற்கு அருகில் நவீன முறையில் புதிதாகக் கட்டப்பட்ட சகல வசதிகளுடன் அமைந்த வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: **S.** கலைச்செல்வன், பலாலிறோட், இராமகிருஷ்ணா பாடசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். **T.P. 0773053063** (47410)

4 பரப்புக்காணியில் அமைந்த வீடு, விற்பனைக்குண்டு. தொடர்பு: **S.**சிறி, பிறவுண் வீதி, கொக்குவில். **T.P.0777111400.** (47536)

## காணி விற்பனைக்கு

29 செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் உள்ள **1¼** பரப்புக் காணியுடன் சிறிய வீடு, எல்லா வசதிகளுடனும் விற்பனைக்குண்டு: **T.P.0776745812, 0776198191** (47535)

திருநெல்வேலி கிழக்கு, ஆடியபாதம் வீதியில் இருந்து முருகன் வீதிக்கு (வெள்ளை வாய்க்கால் வீதி) செல்லும் பாதையில் 2¾பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P.0777 796553, 0776279805** (47542)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

40 நாள் நிரம்பிய நல்ல இன அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.தயாநிதி, பிடாரி அம்மன் கோயில் அருகில், கொக்குவில் மேற்கு. (47539)

## வீடும் தளபாடங்களும் விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் வீடும் பாவித்த தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு :- **T.P.0777079746 (021 - 222 2638 9a.m.** முதல் **5p.m.** வரை) (47538)

## வாகனங்கள் வாடகைக்கு

கார், வான், மோட்டார்சைக்கிள் என்பன SELF-DRIVE வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன், சாரதி அனுமதிப் பரீட்சைக்கான. மோட்டார் சைக்கிள், திருமணக்கார் சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்). T.P.: 021 222 9154, 0777 593722. (46335)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் வேம்படி சந்திக்கு அருகில் இல.175, முதலாம், குறுக்குத்தெருவில் 9 அறைகளுடன் சகல வசதியும் கொண்ட வீடு, வாடகைக்குண்டு. அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது. தொடர்பு: க.கோபால், 87, ஜிம்மா லேன், யாழ்ப்பாணம். **T.P. 6366020**(47512)

## வீடு வாடகைக்கு

யாழ்.பல்கலைக்கழக பாலாலி வீதிக்கு அருகில் அமைந்துள்ள 5 அறைகளுடனும் இணைந்த குளியலறையுடனும் சகல வசதிகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு. **(NGO)** விரும்பத்தக்கது. தொடர்பு: **T.P.0777291685, 0112591280** (47517)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1972 விசாகம், துலாம் ராசி, 7இல் செவ்வாய் 21½ கிரகபாவம், உயரம் 6 அடி, **A/L** படித்த, அரிசி ஆலை உரிமையாளர் மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. 1976 அனுஷம், விருச்சிக ராசி, கிரகபாவம் 04, உயரம் 5'8'' **A/L** படித்த, போட்டோ அன்ட் வீடியோ கிராப்பர், ஸ்ரூடியோ உரிமையாளர் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. தொடர்பு: சிவாலயா, இல.11, யமுனா வீதி, நல்லூர், யாழ். **T.P. 0776528641** (47437)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 06.03.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, கரம்பாம் - ஆலடி, உடுவில், நல்லூர் பாம்சென்ரர்- 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48015)

## இறைச்சிக் கோழி விற்பனை

**Prima Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். **(Electronic** நிறுவை) நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/48132)

## HOUSE FOR RENT

House with attached bath room with floor tiles and with parking space is available for Government and N.G.O. Contact No .0777570137 Palaly Road, Kondavil. (47532)

## பயிற்சி வகுப்பு

உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தலில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக பயிற்சி வகுப்புக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் திணைக்களத தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட உதவி தெரிவத்தாட்சி அலுவலர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

முதற்கட்டமாக எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் பயிற்சி இடம் பெறும். பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் அதற்கான அனுமதி கடிதத்துடன் வரிகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(த-185)

## மரண அறிவித்தல்

### கணேசலிங்கம் உலகநாதன்



கோப்பாய் மத்தி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் உலகநாதன் 01-03-2006 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் மகாதேவியின் அன்புக் கணவரும் யோகிதா, சுகுணதாஸ், சுகிர்தா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் மகாதேவன் (கனடா), மகாலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-03-2006) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.இ. 0776534143,
அண்ணமார் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தகவல்:
மகாதேவி (மனைவி-தேவி),
சுகுணதாஸ் (மகன்).

(47398)(26-19-17)

## பஸ் சேவையை விஸ்தரிக்கக் கோரிக்கை

தென்மராட்சி, மார்ச் 4

யாழ். நகரிலிருந்து மிருசுவில் சந்திவரை நடத்தப்படும் பேருந்து சேவையை மிருசுவில் வடக்குவரை விஸ்தரிக்குமாறு அப்பகுதி மக்கள் பிரதேச செயலருக்கு மகஜர்மூலம் முறையிட்டுள்ளனர்.

மிருசுவில் வடக்குப் பகுதியில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன என்றும், மிருசுவில் வடக்குச் சந்தியிலிருந்து சுமார் 3கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மிருசுவில் சந்திவரை இவர்கள் நடந்து வரவேண்டியிருப்பதாகவும் மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மிருசுவில் சந்திவரை நடத்தப்படும் பேருந்து சேவையை மிருசுவில் வடக்கு சந்திவரை நடத்தினால் அப்பகுதியில் உள்ள மாணவர்கள், அரச ஊழியர்கள், விவசாயிகள் உட்பட பொது மக்கள் பயனடைவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-117)

## தகுதியானவர்கள்...

(7ஆம் 'ப்க்கத் தொடர்ச்சி)

நிதித் திட்டமிடல் அமைச்சின் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தில் உள்ள வரி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களைத்திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் 18 வயதிற்கும் 30 வயதிற்குமிடைப்பட்டவராக இருப்பதுடன் இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றராகவோ அல்லது தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல் டிப்ளோமா பயிற்சி நெறியின் இடைநிலைப்பரீட்சையில் சித்தியடைந்தவராகவோ அல்லது ஐக்கிய இராச்சியக் கணக்கியல் டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்தவராகவோ இருக்க வேண்டும்.

தகுதியானவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் 'ஆணையாளர் (ஒழுங்கமைப்பு), உள்நாட்டு இறைவரித் திணைக்களம், த.பெ.இல.515, கொழும்பு - 02' எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

* * *

நிதித் திட்டமிடல் அமைச்சின் கீழ் உள்ள இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் வரிமதிப்பாளர் வகுப்பு II தரம் II பதவிகளுக்காக நடத்தப்படவுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் 18-30 வயதிற்கிடைப்பட்டவராக இருப்பதுடன் இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

தகுதியானவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் ஆணையாளர் (ஒழுங்கமைப்பு), உள்நாட்டு இறைவரித் திணைக்களம், த.பெ.இல.515, கொழும்பு- 02 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

* * *

சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சால் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

தமிழ், சிங்கள மொழியிலான விரிவுரையாளர்கள், பயிற்சி உத்தியோகத்தர்கள், தமிழ், சிங்கள மொழியிலான உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், நூலகப் பொறுப்பாளர், கணனித் திட்டமிடலாளர், கணனித் தரவுக் குறிப்பு இயக்குநர், முகாமைத்துவ உதவியாளர், கட்புல செவிப்புல் பொறிஞர், கட்புல செவிப் புல உதவியாளர் ஆகிய வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் 21 வயதிற்கும் 45 வயதிற்குமிடைப்பட்டவராக இருக்கவேண் டும்.

அந்தந்தப்பதவிகளுக்கேற்றவாறு தகுதியானவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் 'பணிப்பாளர் நாயகம்' தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம், 191, தர்மபால மாவத்தை, கொழும்பு -'07' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(3-203-86)

எமது அதிகாரம் பெற்ற யாழ்ப்பாண விநியோகஸ்தர்களாக நியமிப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

LAVANIYA SUPER MARKET
783, Hospital Road, Jaffna. Tel: 021 – 222 2841

MAX
சுற்றாடல் நட்பிற்குரிய பொருட்களின் உற்பத்தியாளர்கள்




*Dish Wash
*Guard
*Toilet Bowl Cleaner
*Vip Powder
*Cool Breeze
*Bleach
*Air freshener
*Tile cleaner
*Sanitol
*Hand Wash
*Glass Cleaner
*Washing Powder

LA CEYKEM INTERNATIONAL (PVT) LTD
P.O. BOX 22, MOUNTLAVINIYA.
TELEPHONE - 0714 - 260027

# கருணாவின் நலனைக் கவனிக்கவும் ஒருவர் ஜெனீவாவில் பேச்சுக்காக வந்திருந்தார்!

ஜெனீவாப் பேச்சுகளின்போது பேச்சு மேசையிலும் அதற்கு வெளியிலும் இடம்பெற்ற மேலும் பல சுவாரஸ்ய மான தகவல்களை இனிப் பார்ப்போம் என நேற்றைய அத்தி யாயத்துக்கு முதல் அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அவற்றைத் தொடர்ந்து கவனிப்போமா?

* * *

ஜெனீவாப் பேச்சுப் பற்றிய செய்திகளைச் சேகரித்து அனுப்புவதற்கு இலங்கையிலிருந்து சென்ற தமிழ் ஊடக வியலாளர்கள் ஆக மூவர் மட்டுமே. ஏனையோர் பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர் களில் பலர் நடுநிலைப் போக்குடன் விடயங்களை அணுகும் நியாயமான ஊடகவியலாளர்களாகச் செயற்படுகின்றவர் கள். அதேசமயம், முழு அளவில் பௌத்த - சிங்களப் பேரின வாதத்தைக் கக்கும் ஊடகங்களைப் பிரதிநித்துவப்படுத்தி ஜெனீவா வந்திருந்த இலங்கை ஊடகவியலாளர்கள் சிலர் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகங்கள் போன்றே தமது செயற்பாட்டையும் மேற்கொண்டமையையும் நன்கு காண முடிந்தது.

## வந்தார்கள்

இலங்கையிலிருந்து வந்த ஊடகவியலாளர்களுடன் சுவிஸ் மற்றும் ஏனைய நாடுகளின் ஊடகவியலாளர்கள் பரஸ்பரம் தொடர்புகளை ஏற்படுத்தி உரையாடிய சமயம் இத்தகைய பேரினவாதப் போக்கு ஊடகவியலாளர்கள் இனவாதத்தை முழு அளவில் கக்கியமையையும் அவதானிக்க முடிந்தது.

ஜெனீவாப் பேச்சு ஆரம்பிப்பதற்கு முதல் நாள் 'ஜெனீவா பிரஸ் கிளப்' அலுவலகத்தில் எமது பதிவுகளை மேற்கொள ளச் சென்றிருந்தோம். அப்போது இத்தகைய பேரினவாதப் போக்கு ஊடகவியலாளர் ஒருவரை சந்திக்க நேர்ந்தது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் இலங்கைப் பத்தி ரிகை உலகில் நீடித்து நிற்கும் என்னை, ஊடகத்துறைக்கு ஒரு சில வருடங்களுக்கு முன்னரே நுழைந்த - எனது வயதை ஒத்த - அவருக்கு யார் என்று தெரியவில்லை. அதுவும் நல்லதே என நினைத்துக்கொண்டேன்.

புதிய செய்தியாளர் ஒருவருக்கு ஆலோசனை கூறுபவர் போல எனக்கு உபதேசம் செய்தார். பேச்சு ஆரம்ப தினமான அடுத்த நாள் ஜெனீவாவில் ஐ.நா. அலுவலகத்துக்குப் பக்கத் தில் நடைபெறும் முக்கிய நிகழ்வொன்றை Cover பண்ணும் படி கட்டளையிடாத பாணியில் எனக்கு உத்தரவிட்டார் அந் தப் பிரகிருதி. சிரித்துக் கொண்டு அவரது பணிப்பைச் செவி மடுத்தேன். அடுத்த நாள் நிகழ்வு பற்றிய 'நோட்டீஸ்' ஒன் றையும் எனது கையில் திணிக்க அவர் தவறவில்லை.



கைதாக முன்னர் ஜெனீவா புலி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ராம்ராஜ் (நடுவில் கைகளை உயர்த்தியபடி நிற்பவர்)

'ஹாய்' என்று தலையசைத்து புன்முறுவல் பூத்தபடி அவரை வெட்டிக்கொண்டு புறப்பட்டபோதுதான் அந்த நிகழ்ச்சி என்ன என்பதை நோட்டீஸில் அவதானித்தேன்.

ஐ.நா. அலுவலகத்திலிருந்து கூப்பிடுதொலைவில்தான் நாம் மையமாகக் கொண்டு செயற்படும் 'ஜெனீவா பிரஸ் கிளப்' அலுவலகம் உள்ளது.

அதற்கும் ஐ.நா. அலுவலகத்துக்கும் இடைப்பட்ட பகுதி யில் அடுத்த நாள் நண்பகல் அந்த ஆர்ப்பாட்டம் ஏற்படாகி யிருந்தது.

புலிகளின் நிலைப்பாட்டுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் அது.

**ஜெனீவாப் பேச்சு — ஓர் ஊடகவியலாளனின் பார்வையில்! 6**

சுவிஸ். தலைநகர் பேர்ன். அந்த பேர்ன் கன்டனைச் (பிராந் தியத்தைச்) சேர்ந்த புளொட் ரஞ்சன் அல்லது புலிக்குட்டி என்று அழைக்கப்படும் ஒருவர் மையமாக நின்று ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சி அது என அறிய முடிந்தது. புலிகளுக்கு எதிரான போக்குடைய - சுவிஸில் வாழுகின்ற - தமிழர் களும், சிங்களவர்களுமாக ஒரு இருநூறு பேர்வரை அடுத்த நாள் ஆர்ப்பாட்டத்திற்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப் படுவதாகவும் தகவல் திரட்ட முடிந்தது.

அமைதிப் பேச்சு தொடர்பான செய்திகளைச் சேகரிக்க வந்திருக்கும் ஊடகவியலாளர்கள் மத்தியில் புலி எதிர்ப்புப் பிரசாரத்தை முன்னெடுக்கும் தந்திரம் அது என்பதையும் ஊகிக்க முடிந்தது.

அடுத்த நாள் அமைதிப் பேச்சுச் செய்திகளை தேடிப் பிடித்துத் தொகுத்து இலங்கையில் எங்கள், எங்களது நிறு வனங்களுக்கு அனுப்பவேண்டிய சிரத்தையில் இருக்கும் நமக்கு இந்த ஆர்ப்பாட்டம் அவ்வளவு முக்கியமானதாகப் படவில்லை.

என்றாலும் நேரமும் காலமும் சரிவந்தால் ஆர்ப்பாட்டச் செய்திகளையும் சேகரிக்க முடியும் என்ற் நினைப்போடு விடயத்தை விட்டுவிட்டோம்.

அடுத்த நாள் காலை 'ஜெனீவா பிரஸ் கிளப்' அலுவல கத்திலிருந்து சுமார் 15 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சாட்டோ டி பொய்ஸி அரண்மனையில் நடைபெறும் பேச்சுக ளின் ஆரம்பநிகழ்வு பற்றிய செய்திகளைச் சேகரிக்க பத்திரி கையாளர்கள் கூட்டிச் செல்லப்பட்டனர்.

திரும்பி பிரஸ் கிளப் அலுவலகம் நோக்கி சொகுசு பஸ் ஸில் பயணம் செய்யும்போது அதே ஊடகவியலாளர்களு டனும் அவரது அணியினருடனும் அருகே அழரவேண்டி நேர்ந்தது. பேச்சுவாக்கில் இனப்பிரச்சினை தொடர்பாக சர்ச்சை மூண்டபோதும் இது தேவையற்ற விவாதம் எனக் கருதி விலக்கிக்கொண்டேன்.

பிரஸ் கிளப்பில் வந்திறங்கிய பின்னர் அங்கிருந்தபடி அரண்மனைக்குள் இடம்பெற்ற முதல் நாள் காலை அமர் வின் போதான பேச்சுகளின் விவரங்களை ஊடுருவி அறி யும் நோக்கில் பலருடனும் தொலைபேசி மூலம் தூண்டில் போட்டபடி இருந்தோம். புலிகளின் மதியுரைஞர் பாலாவின் அங்குரார்ப்பண உரையினதும் அரசுத் தரப்புப் பேச்சுக் குழுத் தலைவர் அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வாவின் ஆரம்ப உரையினதும் பிரதிகள் கிடைத்ததால் அவற்றை மொழி பெயர்ப்புச் செய்து அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கும் மும்முரத்தில் நாம் ஈடுபட்டிருந்த போதுதான் அதே ஊடக வியலாளர் மீண்டும் நாம் இருந்த பக்கம் அவசர அவசரமாக வந்தார்.

## வெருட்டினார்கள்

''அங்கு ஆர்ப்பாட்டத்துக்கு மிகமுக்கியமான ஒரு பிர முகர் வந்திருக்கிறார். அதுபற்றிய செய்திகளைச் சேகரிக்க நீர் செல்லவில்லையா?'' - என்று என்னிடம் அவசர அவசர மாக வினாவினார்.

''யார் அப்படி முக்கியமான நபர்?'' - நான் பதில் கேள்வி கேட்டேன்.

''என்ன ஐஸே! இப்படிக் கேட்கிறீர்? ராம்ராஜ் வந்திருக்கி றார். போய் விடயங்களைச் சேகரித்து அலுவலகத்துக்குச் செய்தி அனுப்பும்'' - என்று 'அன்புக் கட்டளை'யிட்டார்.

''ஓ! அப்படியா?'' - என்று சிரித்துக்கொண்டு தலை யாட்டினேன். தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகச் செயற்படும் புல்லுருவிகள், இந்த ஊடகவியலாளர் போன்ற பேரினவாதிகளைப் பொறுத்தவரை மிக முக்கிய பிரமுகர்தான் என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டேன்.

''ஆர்ப்பாட்டத்தில் எத்தனை பேர் பங்கு பற்றுகின்றார் கள்?'' - என்று சாட்டுக்குக் கேட்டு வைத்தேன்.

''ஐந்நூறுக்கும் அதிகமானோர்!'' - என்று அவரிடமிருந்து பதில் வந்தது.

ஆச்சரியமாக இருந்தது. அது சரிதானா என்று உறுதிப் படுத்த ஆர்ப்பாட்டம் நடந்த இடத்தை நோக்கி எட்டி ஒரு நடைபோட்டேன். ஏன் வீண் வம்பு என்று தூரத்தில் நின்ற படியே நோட்டம் விட்டேன். ஒரு நூற்றியைம்பது பேர்வரை அந்தக் குளிரிலும் கூடிநிற்பதை அவதானிக்க முடிந்தது. பதா கைகள் பெரும்பாலும் சிங்களத்தில் காணப்பட்டன. கோஷங் களும் அந்த மொழியில்தான் அமைந்திருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்துக்காகவா லண்டனிலிருந்து சுவி ஸுக்கு ராம்ராஜ் என்ற பிரகிருதி வந்தார் என எண்ணிக் கொண்டேன். கடந்த மாவீரர் தின நிகழ்வு ஜேர்மனியில் நடை பெற்ற சமயம் அதற்கெதிராக - அதைத் தடுத்து நிறுத்து வதற்காக - ஜேர்மன் அதிகாரிகளிடம் நேரடி முறைப்பாடு செய்வதற்காக - ராம்ராஜும் அவரது அணியினரும் லண்ட னில் இருந்து ஜேர்மனியின் டுஸில்டோர்வ் நகருக்கு வந்து சென்றார்கள் என அறிந்திருந்தேன். அதனால் அவர் இந்த ஆர்ப்பாட்டத்துக்காக லண்டனிலிருந்து சுவிஸுக்கு வந்தி ருப்பது ஆச்சரியமாக இருக்கவில்லை. அத்தோடு விட யத்தை விட்டு விட்டேன்.

சற்று நேரத்தில் பிரஸ் கிளப்புக்கு ஒரு தகவல் வந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு வந்திருந்த ராம்ராஜை சுவிஸ் பொலீ ஸார் காத்திருந்து அள்ளிப் போட்டுக்கொண்டு போய்விட் டார்கள் என்பதுதான் அத்தகவல். அதையடுத்து அது பற்றிய செய்தியைத் தோண்டத் தொடங்கினோம். கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாயிற்று அது.

* * *

ராம்ராஜ் அல்லது அவரது லண்டன் பாஸ் போர்ட்டில் குறிப்பிட்டபடி விராஜா ரமியராஜ் - அண்மைக் காலத்தில் ரி.பி.ஸி. என்ற புலி எதிர்ப்பு வானொலிச் சேவை ஒன்றை லண்டனிலிருந்து 'திறம்பட' இயக்கிப் புகழ்பெற்றவர். வெளிநாடுகளில் வதியும் தமிழர்களிடையே அவ்ரது புலி எதிர்ப்புப் புறணி காரணமாக அதிகம் பேசப்பட்டவர்.

தமிழர்கள் பலர் எரிச்சலோடும் சிலர் விருப்போடும் கருதும் நபர் இவர்.

சுவிஸ் பொலீஸாருக்கும் இவருக்கும் இடையிலான கசப்புகளை அறிவதற்கு எண்பதுகளின் பிற்பகுதிகளையும் தொண்ணூறுகளின் முற்பகுதியையும் நாம் ஒரு தடவை தோண்டிப் பார்க்க வேண்டியிருக்கும்.

1989இல் புளொட் தலைவர் உமாமகேஸ்வரன் கொழும் பில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட் டார். அவரைச் சுட்டுக்கொன்றவர் அவரின் முன்னாள் மெய்ப் பாதுகாவலரான ராபின் என்பவரே என்ற பேச்சு புளொட் வட்டாரத்தில் பின்னர் அடிபட்டது.

இந்த ராபின் 90களின் முற்பகுதியில் இயக்க நட வடிக்கைளை எல்லாம் துறந்து சுவிஸில் தஞ்சம் புகுந்து சாதாரண வாழ்கையை ஆரம்பித்தார். இலங்கையிருந்து ஒரு தமிழ்ப் பெண்ணை சுவிஸுக்கு அழைப்பித்து அங்கேயே மணந்து கொண்டார்.

பேர்ன் கன்டனில் லஸ்கன்தாள் என்ற இடத்தில் அவர் மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருந்த சமயத்தில் திடீரென அவரதும் மனைவியதும் சத்தம் சந்தடி அடங்கியதால் அயலவர்கள் பொலீஸாரின் உதவியுடன் அவர்கள் வசித்த வீட்டை உடைத்துப் பார்த்தனர்.

வீட்டுக்குள் மூன்று நாள்களுக்கு முன்னர் ராபினும் அவ



ஆர்ப்பாட்டத்தில் பேரினவாதத் தீவிரப்போக்குடையோரு டன் வலது கோடியில் ராம்ராஜ் (முன்னாள் 'ஒப்சேவர்' ஆசிரிய ரும், புலி எதிர்ப்பு இணையத்தளமான 'ஏஸியன் டிரிபியூனுக்கு' கட்டுரைகள் வரைபவரும் சிங்களத் தீவிரப் போக்குடையவரு மான எச்.எல்.டி. மஹிந்தபால தொப்பியுடன் காணப்படுகின்றார். ஜெனிவாப் பேச்சுகளுக்கு வந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் எந்நேரமும் பேரினவாதம் கக்கிக்கொண்டிருந்த பெரும்பான்மை இன ஊடகவியலாளர்களுள் இவரும் ஒருவர்.

ரது மனைவியும் கத்தியால் குத்தப்பட்டு இறந்த நிலையில் அழுகிய சடலமாகக் காணப்பட்டனர்.

விசாரணைகள் நடந்தன. சம்பவதினம் பகல் வீட்டுக்குள் நுழைந்த சிலர் தனியாக இருந்த ராபினின் துணைவியாரை - நான்கு மாதக் கர்ப்பிணியை - பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய பின்னர் கத்தியால் குத்திப் படுகொலை செய் தமையும், பின்னர் வீட்டுக்குள் மறைந்து, காத்திருந்து மதிய போசனத்துக்காக அலுவலகத்திலிருந்து வீடுதிரும்பிய ராபினை மடக்கிக் கொலை செய்தமையும் விசாரணைகளில் அம்பலமாகின.

ராபினின் மனைவியின் அந்தரங்க உறுப்பிலிருந்து மூன்று வெவ்வேறு நபர்களின் விந்துப்பாய எச்சங்களும் விசா ரணையாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டன.

உமா மகேஸ்வரனுக்குப் பின்னர் புளொட் அமைப்புக் குத் தலைமை வகித்த மாணிக்கதாசனே நேரடியாக சுவிஸில் வந்துநின்று உமா படுகொலைக்குக் காரணமானவரை மற் றும் சிலரோடு நேரில் பிரசன்னமாகி தீட்டித் தள்ளிவிட்டு சுவி ஸில் இருந்து வெளியேறியுள்ளார் என சுவிஸ் விசாரணை யாளர்கள் கருதுகின்றார்கள்.

## வென்றார்கள்!

இந்தப் படுகொலைகள் தொடர்பாக புலிக்குட்டி எனப் படும் புளொட் ரஞ்சன் உட்படச் சிலர் கைதாகினர். சுமார் ஒன்றரை வருடம் விளக்கமறியலில் இருந்த புலிக்குட்டி பின்னர் விடுவிக்கப்பட்டார். மற்றொருவருக்கு எதிராக வழக்கு விசாரணை நடந்தது. எனினும், போதிய ஆதா ரங்கள் இல்லாததால் அவரும் விடுவிக்கப்பட்டார்.

ஆனால், கொலை விவகாரத்தை சுவிஸ் புலனாய்வாளர் கள் மூடி, மறந்துவிடவில்லை.

இதே காலப்பகுதியில் சுவிஸில் பெரும் போதைவஸ்துக் கடத்தல், வியாபாரம் ஆகியவற்றை, மேற்கொண்ட கும்ப லின் தலைவரான 'மூஸ்தபா' என்ற நபர் சுவிஸ் அதிகாரி களின் வலைக்குள் சிக்கவிருந்த சமயத்தில் நாட்டை விட்டுத் தப்பினார்.

**ஜெனீவாப் பேச்சுகளில் நடந்தவை என்ன? உள்வீட்டு விடயங்களை ஜெனீவாவிலிருந்து திரட்டித் தருகின்றார் ஊடகவியலாளர்**

**ந.வித்தியாதரன்**

இவை எல்லாவற்றுக்கும் பின்னர் - நீண்ட பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து - லண்டனில் தோற்றிய ராம்ராஜ் அங்கு அரசியல் தஞ்சம் பெற்று லண்டன் பிரஜையானார்.

லண்டன் பிரஜாவுரிமை பெற்ற ராம்ராஜ் சுவிஸ் பக்கம் தலைவைத்துப் படுப்பதில்லை. ஆனாலும், கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அரசியல் பிரமுகர் அந்தஸ்தோடு அவர் சுவிஸில் தோற்றினார். அப்போதுதான் சுவிஸ் பொலீஸாரிடம் வகையாக மாட்டினார்.

ராபினினதும் அவரது மனைவியினதும் படுகொலைகள் தொடர்பாகத் தாம் தேடிவரும் சந்தேக நபர்களில் ஒருவரும் -

'மூஸ்தபா' என்ற பெயரில் இயங்கிய போதைவஸ்துக் கடத்தல் கும்பல் தாதாவும் -

தாம் தற்போது கைது செய்திருக்கும் ராம்ராஜ்தானா என் பதைக் கண்டறிவதுதான் சுவிஸ் விசாரணையாளர்களின் தற் போதைய நோக்கம் எனத் தெரிகிறது.

தாம் வைத்திருக்கும் பல்வேறு ஆதாரங்கள், தொலைபேசி உரையாடல் பதிவுகள் என்பவற்றின் வலுவோடு இந்த விசா ரணைகளை சுவிஸ் புலனாய்வாளர்கள் முடுக்கி விட்டிருக் கின்றனர் என்பதை சுவிஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

# கருணாவின் நலனைக் கவனிக்கவும்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலனாய்வு வட்டாரங்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி நாம் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் அறியமுடிந்தது.

இவ்விடயங்களில் ராம்ராஜுக்குத் தொடர்பு ஏதும் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் - அல்லது முன்னாள் 'முஸ்தபா' அவர்தான் என்பது கண்டறியப்பட்டால் - நீண்ட பல வருடங்களுக்கு அவருக்கு மீட்சியே இல்லை என்கின்றன சுவிஸ் வட்டாரங்கள்.

ஜெனீவாப் பேச்சுகள் பற்றிய செய்திகளைத் திரட்ட வந்திருந்த ஒரு பத்திரிகையாளரினால் முக்கிய அரசியல் பிரமுகராகக் குறிப்பிடப்பட்ட ஒருவர், சுவிஸ் வந்து சில மணிநேரத்தில் பழம்பெரும் சந்தேகநபர் என்ற கோதாவில் அந்த நாட்டு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டமை பேச்சு நடவடிக்கையை ஒட்டிய ஒரு கொசுறுத் தகவல்தான்.

* * *

அரசுப் பேச்சுக்குழுவும், புலிகளின் பேச்சுக்குழுவும் ஜெனீவாவில் சந்திப்பதற்காக போயிருந்தபோது அங்கு கருணாவின் நலனைக் கண்காணிப்பதற்காகவும் ஒருவர் போயிருந்தார் என்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதா?

சம்பந்தப்பட்டவரின் உயிர்ப் பாதுகாப்புக்குக் கருதி அவரின் பெயரைக் குறிப்பிடுவதை இங்கு தவிர்த்துவிடுகிறேன்.

அவர் ஒரு பெரும்பான்மை இன அரசியல்வாதி. ஜனாதிபதி மஹிந்தவுக்கு நெருக்கமானவர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவுக்காகக் கடுமையாக உழைத்தவர். கருணாவின் அரசியல் தொடர்பாளராக - கருணாவைக் கையாளும் விடயங்களுக்குப் பொறுப்பாக - இவரைத்தான் ஜனாதிபதி மஹிந்த வைத்திருக்கிறார் என அரசியல் வட்டாரங்களில் நம்பகமாகப் பேச்சடிபடுகின்றது. கருணாவின் கொழும்புத் தொடர்பாளர் இவரே என்றும் கூறப்படுகின்றது.

ஜெனீவாப் பேச்சுகளில் கருணா விவகாரம் தொடர்பான விடயங்கள் எழுந்தால் - அவை சம்பந்தமான முடிவுகள் ஏதும் எடுக்கப்படமுன்னர் கருணாவின் நலன் குறித்தும் கவனிக்கக்கூடிய ஒருவர் தேவை - அவசியம் - என்று அரசுத்தரப்பு கருதியது. அத்தகையவரை பேச்சு சமயத்தில் இலங்கையில் வைத்திருந்தால் அவசரத்துக்கு அவருடன் ஜெனீவாவிலிருந்து தொலைபேசியில் உரையாடவேண்டிநேரும். அது வீண் சர்ச்சைகள், குழப்பங்கள், பின்விளைவுகளை ஏற்படுத்தலாம் எனக்கருதிய அரசுத்தலைமை, அதைத் தவிர்ப்பதற்காகச் சம்பந்தப்பட்ட பிரமுகரை அச்சமயத்தில் ஜெனீவாவில் வைத்திருக்க முடிவு செய்தது.

இதனால், அரசுப்பேச்சுக் குழுவின் வள ஆளணியில் ஒருவராக அவர் சேர்க்கப்பட்டார். ஆனால் அந்த வள ஆளணியினருக்குரிய பணியில் அவர் ஈடுபடவேயில்லை.

பேச்சு நடைபெற்ற சமயங்களில் எல்லாம் ஜெனீவாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் அவர் முடங்கி - காத்து - கிடந்தார்.

தமது ஆளான கருணாவின் விடயம் குறித்து அரச தூதுக்குழுவுக்கு ஏதேனும் விளக்கம் தேவைப்பட்டால் அதை வழங்குவதற்கு அவர் தயாராக இருந்தார். ஆனால் அத்தகைய கேள்வி ஏதும் இப்பேச்சுகளில் எழாததால் அவரின் பங்களிப்பு இம்முறை தேவைப்படவில்லை.

அரச பேச்சுக்குழுவின் வள ஆளணியினராக வந்த இந்த அரசுத் தரப்பு அரசியல்வாதி, பேச்சு நடைபெறும் அரண்மனைப் பக்கமே தலை வைத்துப்படுக்காமல் தூதரகத்திலும் தங்கியிருந்த ஹோட்டலிலும் முடங்கிக் கிடந்ததால் சில ஊடகங்கள் வேறுமாதிரி கதை கட்டிவிட்டன. பேச்சுக்குள் வந்த இந்த அரசியல்வாதியை, பேச்சு இடத்துக்கு அனுமதிக்காமல் இலங்கைத் தூதரகத்துக்குள் அரசு முடக்கி, தடுத்து வைத்திருக்கிறது என்பதுதான் பரப்பப்பட்ட செய்தியாகும். ஆனால் அது தவறானது.

கருணா நலனை கவனிப்பதற்காக ஜெனீவா வந்த அவர், அத்தேவையை நிறைவு செய்யும் சித்தத்துடன் - சிரத்தையுடன் - தூதரகத்தில் காத்துக்கிடந்தாரே தவிர, முடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வப்போது அரசுத் தரப்புப் பேச்சுக் குழுவின் பிரதிநிதிகள் நடத்திய கலந்துரையாடல்களில் இவர் கலந்துகொண்டார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வேட்பாளர் மஹிந்தவுக்கே கருணாவின் ஆதரவு என்று தெரிவிக்கும் செய்தியை கருணாவிடமிருந்து பெற்றுவந்து சிங்களத் தீவிரவாதப் போக்குடைய கொழும்பு தனியார் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்தவரும் இந்த அரசியல்வாதியே.

இந்தச் செய்தியை அப்படியே பெற்று பிரசுரித்து மஹிந்த ஆதரவை வெளிப்படுத்திய ஊடகவியலாளருக்கு பரிசாக அரச ஊடகம் ஒன்றில் முதன்மைப் பதவி இப்போது வழங்கப்பட்டிருக்கின்றது. நன்றிக் கடனாக இந்தப் பதவியை அந்த ஊடகவியலாளருக்குப் பெற்றுக் கொடுத்தவரும் இந்த அரசியல்வாதிதான்.

அரசுத் தலைமையின் நன்றிப் பெருக்குக் காரணமாக அரச ஊடகம் ஒன்றில் தலைமைப் பதவியைப் பெற்ற அந்த ஊடகவியலாளரும் ஜெனீவாப் பேச்சுச் செய்தி களை சேகரிப்பதற்காக - அரச ஊடகப் பிரதிநிதியாக - அங்கு வந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கருணா குழுவின் தொடர்பாளர் என்ற மிதப்புமிக்க மேற்படி அரசுத் தரப்பு அரசியல்வாதி நாடாளுமன்ற அமர்வுகளுக்கு இடையே சண்டித்தனம் காட்டவும் தயங்குவதில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

* * *

ஜெனீவாப் பேச்சுகளின் இறுதியில் ஓரிரு சொற்கள் குறித்த விடயத்தில் அரசுத் தரப்பும் புலிகள் தரப்பும் சுமார் மூன்று மணி நேரம் இழுபட்டனர் என்று நேற்றுக் குறிப்பிட்ட நான், அது பற்றி இன்றைய இதழில் பிரஸ்தாபிப்பேன் என்றும் சொல்லியிருந்தேன்.

ஆனால் வேறு கொசுறுத் தகவல்கள் இன்றைய தொடரில் இடத்தைப் பிடித்துக் கொண்டதால் அந்த விடயத்தை நாளை மறுதினம் பார்ப்போமா?

(வளரும்)

## பிரான்பற்றில் சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம்,மார்ச்4

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பிரான்பற்று யாவத்தைப் பிரதேச மக்களின் அபிவிருத்திக்கென புதிய சனசமூக நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பிரான் பற்று நான்காம் வட்டார மக்களை இணைத்ததாக இந்தப் புதிய சனசமூக நிலையம் யாவத்தை முருகன் சனசமூக நிலையம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ளது.

(த-185)

## உள்ளூரட்சி சபைகளுக்கென உழவுஇயந்திரங்கள்

தென்மராட்சி,மார்ச்4

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கவென 9 உழவுஇயந்திரங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிழ்ச்சித் திட்ட (யு.என்.டி.பி.) நிறுவனத்தினரால் நேற்று இந்த வாகனங்கள் வவுனியாவிலிருந்து ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டது.

சுத்திகரிப்பு மற்றும் குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களுக்கென பெட்டியுடன் கூடிய உழவு இயந்திரங்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-117)


### பணிப்பெண் தேவை

இங்கிலாந்தில் வசிக்கும் இரண்டு குழந்தைகளைக் கொண்ட சிறு குடும்பத்திற்கு அவர்களுடன் தங்கியிருந்து உதவுவதற்கு பணிப்பெண் தேவை. வயதெல்லை 35-45 இற்குள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
த.துரைசிங்கம்,
588/4, நாவலர் வீதி, அரியாலை.
தொ.பே.:9700
(47558-11-16)

### வேலைக்கு ஆள்கள் தேவை

தொலைபேசிக் கம்பங்கள் நாட்டுவதற்கும் தொலைபேசி இணைப்பை வழங்குவதற்கும் வேலையாள்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
நேரம் :காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
தொடர்பு: 'சிவசக்தி மோட்டோர்ஸ்'
103, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 077110643, 0776544627.
(47555-11-16)

### ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7450653 முதல் 7460609 வரை. சீட்டிழுப்பு இல. 216 திகதி 02-03-2006

வெற்றி எண்கள்

7 8 0 0 7 1 — சுப்பர் எண் 07

ஜக்பொட் பரிசு ரூ. 11,479,400/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 11,479,400/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 08 | 50,000/= | 400,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 88 | 5,000/= | 440,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 863 | 500/= | 431,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8603 | 50/= | 430,150/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 85286 | 10/= | 852,860/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 07 | 5,000/= | 35,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 88 | 1,000/= | 88,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 865 | 100/= | 86,500/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8529 | 20/= | 170,580/= |
| | | மொத்தம் ரூ. | 3,934,590/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,537,190/-

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 7458414-6-73 |
| கொழும்பு | 7459094-6-20 |
| அம்பாறை | 7455652-1-44 |
| குருணாகல் | 7458814-6-11 |
| நுவரேலியா | 7457887-7-16 |
| திருகோணமலை | 7454574-2-43 |
| அநுராதபுரம் | 7458658-3-98 |
| மாத்தளை | 7454246-8-53 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 11,718,700/-

தொடர் இல. 6539035 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 மார்ச் 06 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.



உ
யாழ்.வண்ணை - கன்னாதிட்டி
அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்
மகோற்சவ விஞ்ஞாபனம்

பார்த்திப வருடம் (2006 ஆம் ஆண்டு)
கொடியேற்றம்: 05.03.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி
தேர்த்திருவிழா: 13.03.2006 திங்கட்கிழமை காலை 9 மணி
தீர்த்தத்திருவிழா: 14.03.2006 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி

தேர்த்திருவிழா பொது உபயமாக நடைபெறவிருப்பதால் அம்பிகை அடியார்கள் தங்களால் இயன்ற பங்களிப்பைச் செலுத்தி மேற்படி திருவிழா சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(47560)(42-16-11) தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்.

### யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
### வருடாந்தப் பொதுக்கூட்டம்-2006

மேற்படி சங்கப் பொதுக்கூட்டம் 19.03.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் சகலரும் தவறாது சமுகம் தரவும்.

பொ.சுந்தரலிங்கம் தலைவர். (47563)(32-11-16) வை.சிவராசா செயலாளர்.

உ
ஓம் ஸ்ரீ சாயிராம்
### CEYLON MEDICAL COLLEGE COUNCIL
Pharmacist's (External) Examination - May 2006

27-05-2006 ஆம் திகதி நடைபெற இருக்கும் மேற்படி பரீட்சைக்கு வகுப்புகள் சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தப்படுகின்றன.

சாயிராம் பார்மசி கல்வி, பட்டப்படிப்புகள் கல்லூரி, 57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை, அடைக்கலந்தோட்டம் ஸ்ரீகந்தசுவாமி கோயில் வணக்கம் செய்வோர் சபையின் 53ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை (05.03.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரவும்.

க.அண்ணாமலைநாதன் தலைவர் | மு.ஜெயநாதன் செயலாளர். | பரிபாலன சபை.


### மரண அறிவித்தல்

### R.V.A. மாரியப்பன்



(பழைய மார்க்கட் - நெல்லியடி)

நெல்லியடி பழைய மார்க்கட் அழகர் களஞ்சியம் உரிமையாளரும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட அழகர்சாமி செட்டியார் மாரியப்பன் அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அழகர்சாமி செட்டியார் - ஏரம்மாள் தம்பதியரின் புதல்வனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் அழகேசன் (நிமலன்), கலைவாணி, சரவணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராமச்சந்திரன், சுப்பிரமணியம், பரமசிவம், பாலகிருஷ்ணன் (சுவிஸ்), மோகன், கணேசன் (விநாயகர் களஞ்சியம் - நெல்லியடி), குகராஜ் (சுவிஸ்), பாஸ்கரன், கனகராஜ் (சுவிஸ்), இராமலட்சுமி, ஜெயராம், சுப்புலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகையன் கோயிலடி, நெல்லியடி. | அழகர் களஞ்சியம், நெல்லியடி, பழைய சந்தை. | தகவல்: குடும்பத்தினர்.

(47556)(24-11-16)

# இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் நடைபெறவுள்ளது.

கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள போட்டிக்கு பிரதம் விருந்தினராக பழைய மாணவரும் உதவி சங்க அத்தியட்சகருமாகிய செ.பேரின்பநாயகம் கலந்துகொள்வார். (ஐ-14)

* * *

கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சீ.சிவனேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

சிறப்பு விருந்தினராக மேலதிக மாகாணக் கல்வித் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் வே.பாராஎன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-14)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 4

புங்குடுதீவு சித்தி விநாயகர் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் ந.கலைநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-14)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 4

கலட்டி மெதடிஸ்தமிசன் தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக சமுர்த்தி உத்தியோகத்தர் சி.ரவீந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-14)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 4

இருபாலை சீ.சீ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

(ஐ-14)


## வட மாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்கம்
## முக்கிய அறிவித்தல்

**வடமாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்கத்தில் 02.03.2006 இல் நடைபெற்ற கூட்டத்தில் 1000 சுருட்டுகள் சுருட்டுவதற்கு 01.04.2006 தொடக்கம் 600/= ரூபா சம்பளம் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**குறிப்பு:**

**சுருட்டுக் கூலி உயர்வால் 01.04.2006 தொடக்கம் சகல சுருட்டுக்களின் விலைகளும் அதிகரிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.**

T.குணரெட்ணம் S.S.சச்சிதானந்தசிவம்
செயலாளர். (47567) (11-49) தலைவர்.

## தேவை

கீழே காணும் நிறுவனத்திற்கு தங்கியிருந்து வேலை பார்ப்பதற்கு *Room boy* தேவை. 06.03.2006 அன்று காலை 10 a.m. - 3p.m. நேரில் வரவும்.

**GREEN INN RESTAURANT**
*60, KANDY ROAD, CHUNDIKULI, JAFFNA.*
*PHONE: 222 3898, 077 6917030*

(எம்மிடம் சகல வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகளும் கிடைக்கும். சைவ, அசைவ உணவுகளும் பார்சல்களாகவும் பெற்றுக்கொள்ளலாம். விசேட வைபவங்களுக்கு ஓடர்கள் முன்கூட்டியே ஏற்றுக்கொள்ளப்படும்.) (சி-48164) (11-49)




## நாகம்ஸ் சுன்னாகம்

*அஜித், லைலா நடித்த*

**பரமசிவன்**

பு.நே. 11.00, 3.00, 7.00

## ராஜா யாழ்ப்பாணம்

சத்தியராஜ், சிபிராஜ், நமீதா நடித்த

**கோவை பிரதர்ஸ்**

பு.நே. 10.30, 1.30,4.30 , 7.30

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
அக்ஷன் கிங் அர்ஜுன் , கஜாலா , விவேக் நடித்த

**மதராஸி**

பு.நே.: 10.00, 1.00, 4.00


## மரண அறிவித்தல்

# சோதிநாகரத்தினம் தில்லைநடராஜா



**கீரிமலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு - பாமன்கடை ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் வட மாகாண மீள் குடியேற்ற புனர்வாழ்வு அதிகாரசபைவான் நில அளவையாளர் சோதிநாகரத்தினம் தில்லைநடராஜா அவர்கள் நேற்று முன்தினம் (02.03.2006) வியாழனன்று கல்கத்தாவில் காலமானார்.**

**அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சோதிநாகரத்தினம் - மாமாங்கம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற அகிலேசர்-நாகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கனகசபை, நகுலாம்பிகை, வடிவாம்பிகை ஆகியோரின் சகோதரரும் தற்பரானந்தன் காலஞ்சென்ற பொன்னம்பலம் ஆகியோரின் மைத்துனரும் கேதாரணி (அமெரிக்கா), பவதாரணி (லண்டன்), குமரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவரூபன் (அமெரிக்கா), நிகேதினி, சிவமயூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் கனத்தை ஜெயரட்ன மார்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

*10/25, பாமன்கடை ஒழுங்கை,*
*கொழும்பு - 06.*
*தொ.பேசி.: 5558811* (சி-48166) (11-49)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமகன்.**

## அதிபர்கள் கூட்டம் ஒத்திவைப்பு

தென்மராட்சி,மார்ச்4

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவிருந்த் கூட்டம் எதிர்வரும் ஒன்பதாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஐ-117)

## தேர்தல் கடமை கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,மார்ச்4

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு இன்றும் நாளையும் (சனி, ஞாயிறு) மு.ப. 9 மணி தொடக்கம் 12.30 மணி வரை வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் வழங்கப்படும் - என்று வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

### கொழும்பு மாநகரசபைத் தேர்தல் இடைநிறுத்தத்தை ஆட்சேபிக்கும்

# தேர்தல் ஆணையரின் முறையீடு மீதான விசாரணை செவ்வாய்க்கு ஒத்திவைப்பு

கொழும்பு மாநகரசபைக்கான தேர்தலை இடைநிறுத்தும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்திருக்கும் இடைக்காலத் தடை உத்தரவைத் தள்ளுபடி செய்யக்கோரி தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் கொழும்பு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் ஆகியோர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம் பூர்வாங்க விசாரணைகளை நேற்று மேற்கொண்ட பின்னர் அடுத்தகட்ட விசாரணையை எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைத்தது.

உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஷிராணி பண்டாரநாயக்கா, ரி.பி. வீரசூரிய, நிமால் திஸநாயக்க ஆகியோரைக் கொண்ட ஆயத்தின் முன்னால் இந்த மனு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர்களான தேர்தல்கள் ஆணையாளர் தயாணந்த திஸநாயக்கா, கொழும்பு மாவட் டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் மஹிந்த தேசப்பிரிய ஆகியோர் சார்பில் சொலிஸிட்டர் ஜெனரல் ஸி.ஆர்.டி சில்வா ஆஜரானார். மேற்படி வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்குக் காரணம் காட்டும்படி சட்டம் வலியுறுத்தவில்லை. இயற்கை நீதியின் படியும் அப்படி வற்புறுத்தமுடியாது. - என்று வாதிட்டார் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல்.

வேட்பாளர் ஒருவரின் வேட்பு மனுத் தவறுக்காக முழு வேட்பாளர்களின் உரிமைகளையும் பறிப்பதற்கு அனுமதிக்க முடியுமா என்ற கேள்வியை நீதியரசர்கள் கிளப்பினர்.

மேற்படி வேட்பு மனு நிராகரிப்புத் தொடர்பான சட்டத்தின் சிங்கள வாசகத்தில் சம்பந்தப்பட்ட நபரின் வேட்பு மனுவை நிராகரிக்க வேண்டும் என்றே கூறப்பட்டுள்ளதே தவிர, வேட்பு மனுக்களை நிராகரிக்க வேண்டும் என்று பன்மையில் கூறப்படவில்லை என்பதையும் நீதியரசர்கள் சுட்டிக்காட்டினர். அப்படி இருக்கையில் அக்கட்சியின் முழு வேட்பாளர்களினதும் வேட்புமனுக்களை நிராகரிப்பது பொருத்தப்பாடானதா என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

எதிர்மனுதாரர்களான ஐ.தே.கட்சியின் செயலாளர் மற்றும் இருபது பேர் சார்பாக சட்டத்தரணிகள் நிறுவனமான சமரரத்ன அஸோஸியேட்ஸின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, சிரேஷ்ட சட்டத்தரணிகள் உபுல் ஜெயசூரிய, சஞ்சீவ ஜெயவர்த்தன் ஆகியோர் ஆஜரானார்கள். (ஐ-க)


## அறிவித்தல்

**2006.04.28 ஆம் திகதி தொடக்கம் 2006.05.19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள க.பொ.த.(உ/த) பரீட்சை தொடர்பான ஆவணங்களை யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலிருந்து கொண்டுசெல்வதற்கு இரண்டு மோட்டார் வண்டிகளை வாடகைக்கு அமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.**

**இச்சேவைக்கு தங்கள் மோட்டார் வண்டிகளை வாடகைக்கு விட விரும்பும் உரிமையாளர்கள் இவ் வலயக்கல்வி அலுவலகத்தினால் விநியோகிக்கப்படும் படிவத்தில் 2006.03.10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கோரப்படுகின்றன.**

**ப.விக்னேஸ்வரன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
(சி-48165) (11-49) **வலிகாமம்.**


## மரண அறிவித்தல்கள்

### *சின்னத்தம்பி நடராசா*



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடராசா அவர்கள் நேற்று (03.03.2006) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் அன்னலட்சுமி, இரட்ணசிங்கம், வரதலட்சுமி (லண்டன்), இரட்ணகோபால், சந்திரகுமாரி (சுவிஸ்), பாக்கியலட்சுமி (லண்டன்), சிவராஜா, இராஜலக்சுமி (லண்டன்), சிவலக்சுமி, தயாலக்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் லோகநாதன் (கணேஸ்), ஜெயராணி, நடராஜா (ஓவசியர்), நகுலராணி, நேசராணி (சுவிஸ்), சிவராஜா (லண்டன்), நகுலேஸ்வரி, ஜெகநாதன் (லண்டன்), பேரானந்தம், இராஜநாயகம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அமரர் திருமதி பொன்னம்மா, திருமதி அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2006) சனிக்கிழமை நடைபெற்று, நண்பகல் 12.30 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 15, 2ஆம் குறுக்குத் தெரு,* (47568) (11-49)
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*

தகவல்:
**ந.சிவராஜா (மகன்).**

### *விநாசித்தம்பி மாரிமுத்தன்*

**(ஓய்வுபெற்ற யாழ்.மாநகர சபை ஊழியர்)**



சங்கரப்பிள்ளை வீதி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் 432/2 மடம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி மாரிமுத்தன் 02.03.2006 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், புஸ்பராணி, செல்வராணி, தெய்வேந்திரம், இராஜேஸ்வரி, சங்கர்ராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் தம்பிராசா, பரமசாமி (லிங்கன்), சிவசக்தி, குணவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் தமயந்தி, தயந்தினி, இராஜ்குமார், உஷா, தர்சினி, தர்மராசா, தர்மராஜ், தாரணி, ரூபினி, பவிலா, சுரேஸ்குமார், நரேஸ்குமார் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2006) சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்று கொட்டடி வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*432/2, மடம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (47570) (11-49)

தகவல்:
**தெய்வேந்திரம், சங்கர்ராஜா**
(பிள்ளைகள்)

# நோர்வே அமைச்சு அதிகாரிகள் புலிகளின் குழுவினருடன் பேச்சு

ஒஸ்லோ, மார்ச் 4

தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சு வார்த்தைக் குழுவினர் நேற்று நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜேம்ஸ் தொல் தெம் போர்க்கைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் குறித்து அவ்வப்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது என விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவின் ஊடக இணைப்பாளர் நகுலன் தெரிவித்துள்ளார்.

சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை நோர்வேயில் வேறு சில முக்கிய சந்திப்புக்களையும் மேற்கொண்டனர்.

புலிகளின் குழுவினர் நோர்வே கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் குழுவினரைச் சந்தித்துப் பேசினர். நோர்வேயின் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் தமிழர்களின் நெருக்கடி மற்றும் சமாதான முயற்சிகள் குறித்து தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரால் விளக்கமளிக்கப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் ஜனநாயகக் கட்சியின் முக்கிய தலைவர்களான லைலா டோவி மற்றும் ஓட் செட்டர் ஆகியோர் பங்கேற்றனர்.

நேற்றுமாலை விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவினர் சுவிஸ் சென்று அங்கிருந்து நாளை தாயகம் புறப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-190)

## மாதகலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது படகில் இருந்த மகன் கடலில் வீழ்ந்தார் என்றும் - அவரது தந்தை கடலில் குதித்து மகனைக் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தைக் கண்டித்து வலி.தென் மேற்குக் கடற்றொழிலாளர்கள் நேற்றிரவு தொடக்கம் கடற் றொழிலுக்குச் செல்லாமல் தொடர்ச்சியான பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ-3-7)

## போராளிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவந்தது.

இச்சம்பவம் தொடர்பில் கண்காணிப்புக் குழுவின் உடனடிக் கவனத்திற்குக் கொண்டு சென்றோம். ஆனால், ஸ்ரீலங்கா இராணுவம் இத்தகைய கைது நடவடிக்கை எதனையும் தாங்கள் மேற்கொள்ளவில்லை என்று கண்காணிப்புக்குழுவிற்குத் தெரிவித்தது.

இந்நிலையில், ஸ்ரீலங்கா இராணுவத்தினரே கைது செய்தனர் என்பதை நேரில் பார்த்த சாட்சியம் உள்ளிட்ட கூடுதல் ஆதாரங்களை கண்காணிப்புக் குழுவிடம் கையளித்து, எமது முறைப்பாட்டை மீளப் புதுப்பித்துள்ளோம். இது குறித்து கண்காணிப்புக் குழுவின் பதிலுக்காகக் காத்திருக்கிறோம் என்றார் சி. எழிலன். (ஐ-190)

## நவீன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.கவின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான நவீன் திஸநாயக்க, அக்கட்சியின் புத்தளம் அமைப்பாளர் நியோமல் பெரேரா மற்றும் இரத்தினபுரி அமைப்பாளர் சுஸந்த புஞ்சி நிலமே ஆகியோரே ஆளுங் கட்சிப் பக்கம் 'பல்டி' அடிக்கவுள்ளனர் - எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே.கவிலிருந்து ஏற்கனவே ஆளும் கட் சிக்கு தாவிய சிலருக்கு அமைச்சர் பதவி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த சமயத்தில் மேற்படி மூவருக்கும் பிரதி அமைச்சுப் பதவிகளே வழங்கப்படும் - என உறுதியளிக்கப்பட்டிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன.

## சிவில் நிர்வாகத்தில் படைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழந்துவிட்ட உரிமைக்காகப் போராடிவரும் தமிழ் மாணவர்கள் மீது தனது இராணுவக் கரங்களைப் பல்வேறு வடிவங்களில் திணித்து வருகின்றது.

ஒரு புறம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பாடசாலைகளை ஆக்கிரமித்துத் தமிழ் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு பெரும் தடையாக இருக்கும் ஆக்கிரமிப்பு இராணுவம், மறுபுறம் மாணவர்களை அடித்துத் துன்புறுத்துவதும் எமது கல்வியாளர்களை தனது இராணுவ முகாம்களுக்கு அழைத்துக் கொலை அச்சுறுத்தல்கள் விடுவதும் அதிகரித்த வண்ணம் உள்ளன.

நேற்றுமுன்தினம் காங்கேசன்துறை ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு படைமுகாமிற்கு கல்வியாளர்களை அழைத்து அவர்களை அச்சுறுத்தியதுடன், பயமுறுத்தலையும் ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத் தளபதி விட்டுள்ளமையானது மிகவும் மோசமாக சிவில் நிர்வாகத்தில் தலையிடுகின்ற அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

இதைவிட, கடந்த 24 ஆம் திகதி இளவாலை சென். ஹென்றீஸ் பாடசாலை சிறுவர்கள் நான்கு பேர் மிகவும் மோசமான முறையில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டு, அவர்களில் 13 வயது நிரம்பிய ஜேம்ஸ் நிரோஷன் எனும் மாணவன் யாழ். போதனா வைத்தியாசாலையில் சேர்க்கப்பட்டான். இதனைத் தொடர்ந்து இதற்கெதிராக குரல் கொடுக்க முற்பட்ட பாடசாலை அதிபரும், மாணவர்களும் ஆயுத முனையில் அச்சுறுத்தப்பட்டனர்.

கடந்த வாரம் ஸ்ரீலங்கா இராணுவக் கெடுபிடிகளை தெரியப்படுத்துவதற்காக பளை சென்று வந்த யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களையும், ஆசிரியர்களையும் ஆயுத முனையில் அச்சுறுத்திய ஸ்ரீலங்கா இராணுவத்தினர், பாடசாலை அதிபருக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுத்துவருகின்றனர்.

இவ்வாறான இராணுவத்தினரின் செயற்பாடுகள் மூலம் யாழ். குடாநாட்டு மாணவர்களின் அரசியல் எழுச்சியியையும் அவர்கள் இழந்துவிட்ட விடுதலையைப் பெறுவதற்கான அவாவையும் ஒருபோதும் கட்டுப்படுத்திவிட முடியாது என்பதை ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத் தளபதிக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

காலங்காலமாக ஆட்சிக்கு வந்த ஸ்ரீலங்கா அரசுகளினால் தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்பட்ட போதுதான், அவர்கள் அரசியல் ரீதியிலும், ஆயுத ரீதியிலும் ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடப் புறப்பட்டார்கள். இதனைச் ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி உணர்ந்துகொள்ளவேண்டும்.

அதைவிடுத்து தொடர்ந்தும் தமிழ் மாணவர்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்பட்டால் யாழ். குடாநாடு எங்கும் ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தினருக்கு எதிராக மாணவர் போர் வெடிக்கும் என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இன்று நாம் சமாதானத்தின் மீதான விரக்தியின் விளிம்பிலும், எமது விடுதலையின் நம்பிக்கையின் வாசற்படியிலும் வந்து நிற்கும் வேளையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரைச் சிந்தித்துச் செயற்படுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இராணுவத்தினரின் இத்தகைய சிவில் நிர்வாகத்தில் தலையிடும் செயற்பாட்டைக் கண்டித்தும் மாணவர்களும், கல்வியாளர்களும் அச்சுறுத்தப்படுவதைக் கண்டித்தும் எதிர்வரும் திங்கட்கிழமை அனைத்துப் பாடசாலை மாணவர்களும் தமது கற்றல் செயற்பாடுகளைப் பகிஷ்கரிப்பதனூடாக ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தினருக்கு ஒரு செய்தியைக் கூற விரும்புகின்றோம்.

நாம் எமது அரசியல் உரிமையை நிலைநாட்டுவதற்காக எமது செயற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற் கொள்வோம். அத னைத் தடுக்க ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவம் முற்படுமானால் யாழ். குடா நாடு எங்கும் ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தினருக்கு எதிராக மாணவர் புரட்சி வெடிக்கும் என்பதனைக் கூறிவைக்கின்றோம் - என்றுள்ளது. (ஐ-3)

## தமிழர் விவகாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை ஊடகவியலாளர்களிடம் கருணாநிதி இதனைத் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் மன்மோகனைச் சந்திக்கும் வாய்ப்பின்போது ஈழத்தமிழர் பிரச்சினையை முதன்மை விடயமாகப் பேசுவேன்.

இலங்கைத் தீவிலிருந்து அகதிகள் மீண்டும் வருகைதருவது வருத்தமளிக்கிறது. அங்குள்ள தமிழர்கள் விரும்புகிற தீர்வை நோர்வே அனுசரணையுடன் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அமைதிப் பேச்சுக்களின் மூலம் எட்டப்படவேண்டும்.

தற்போது நடைபெற்றுவரும் அமைதிப் பேச்சுகளுக்கு எதுவிதத் தடையும் ஏற்படாத வகையில் இந்திய அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளிக்கவேண்டும் என்றார் கருணாநிதி. (ஐ-190)

## நாட்டின் இறைமையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"பேச்சின் முடிவில் புலிகளும், அரசும் ஒன்றாகச் சேர்ந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அப்படியே நடைமுறைப்படுத்துவது என அரசு தெரிவித்துவிட்டு, இப்போது இங்கு வந்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை திருத்திவிட்டோம் எனப் பொய்யாக அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது.

- "அரசின் இந்த இரட்டைப் போக்கானது மக்கள் மத்தியில் அரசு மீதான நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது. அடுத்த கட்டப் பேச்சில் இது பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்."

- இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்க நேற்றுமுன்தினம் தம்மைச் சந்தித்த அரச பேச்சுக் குழுவின் தலைவரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் நேரில் தெரிவித்தார்.

ஜெனீவாப் பேச்சில் ஏற்பட்ட பலாபலன்களை அனைத்துக் கட்சிகளுக்கும் விளக்கிக் கூறவும் அடுத்த கட்டப் பேச்சுக்கு அக்கட்சிகளின் ஆதரவைப் பெறவும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டத் திட்டமிட்டிருந்தார்.

ஜெனீவாப் பேச்சில் எட்டப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாகவும் அவைபற்றி அரசு வெளியிட்டுவரும் கருத்துகள் தொடர்பாகவும் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமைய போன்ற கட்சிகள் அரசுடன் முரண்பட்டு நிற்கின்றன.

இந்த முரண்பாட்டை நீக்கிய பின்பே சர்வகட்சி மாநாட்டை நடத்தவேண்டும் எனத் தீர்மானித்த ஜனாதிபதி, திங்கட்கிழமை ஆறாம் திகதிக்கு மாநாட்டை ஒத்திப்போட்டு விட்டு, இந்தக் கட்சிகளுடன் தனித்தனியே சந்தித்து நிலமையை விளக்கத் தீர்மானித்தார் எனக் கூறப்பட்டது.

முதலில் ஜாதிக ஹெல உறுமயவைச் சந்தித்து உரையாடி அவர்களை ஓர் இணக்கப்பாட்டிற்குக் கொண்டுவருமாறு ஜனாதிபதி நேற்றுமுன்தினம் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவைப் பணித்தார். அதன்படியே, நிமால் சிறிபால டி சில்வா ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்கவைச் சந்தித்து உரையாடினார்.

அப்போதே ரணவக்க மேற்கண்டவாறு கூறினார் எனத் தெரிகிறது. அப்போது அவர் மேலும் தெரிவித்தவை எனக் கூறப்படுவதாவது:-

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் அதிக குறைபாடுகள் உள்ளன என்பதை இந்த அரசு நன்கு அறியும். இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொண்டு அதன் பின்பே அதனை நடைமுறைப்படுத்துவது என அரசு கூறியிருந்தது.

பேச்சு மேசைக்குச் சென்று பேச்சின் தொடக்கத்தில் யுத்த நிறுத்தத்தின் பிழைகளைச் சுட்டிக்காட்டி அரசு விமர்சிக்கத் தொடங்கியது. அப்போது யுத்தநிறுத்த ஒப்பந்தம் திருத்தப்படும் என்றே எல்லோரும் எதிர்பார்த்தனர்.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அதை எதிர்த்தது. இறுதியில் புலிகளின் இழுப்புக்கு அரச பிரதிநிதிகள் வளைந்து கொடுத்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை திருத்தாமல் அப்படியே நடைமுறைப்படுத்துவதற்கு இணங்கி நாட்டின் இறைமையைப் புலிகளிடம் அடகு வைத்து விட்டனர்.

பலம் பொருந்திய அரசு இருந்தும் கூட புலிகளை ஓர் இணக்கப்பாட்டிற்கு கொண்டு வர அரசால் முடியவில்லை. இறுதியில் ஒப்பந்தம் திருத்தப்பட்டதாக மக்களுக்கு அரசு பொய் கூறிவருகிறது. அரசின் இந்த நிலைப்பாடு அடுத்த கட்டப் பேச்சில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

- இவ்வாறு ரணவக்க கூறினார்.

இவ்விடயங்கள் தொடர்பாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, சம்பிக்க ரணவக்கவிடம் பல விளக்கங்களை முன்வைத்த போதும் அவை ஜாதிக ஹெல உறுமயவுக்குத் திருப்தியானவையாக அமையவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க)

## விடுதலைப் புலிகளுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழு நாட்டுக்குமே கிடைத்த வெற்றி,

ஜெனீவாப் பேச்சுக் குறித்துப் பலரும் பலவாறு கருத்துத் தெரிவித்து வருகின்றனர். ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றன. யார் என்ன சொன்னாலும் இந்தப் பேச்சு வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க அடித்தளமாய் அமைந்துள்ளது என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஜெனீவாப் பேச்சு தொடங்குமுன் வடக்கு - கிழக்கில் படுகொலைகள், ஆள்கடத்தல்கள் மற்றும் சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல் போன்ற வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வந்தன. ஜெனீவாப்பேச்சிற்குப் பிறகு அந்த வன்முறை நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட்டுவிட்டன.

வடக்கு - கிழக்கில் உள்ள மக்கள் மாத்திரமின்றி நாடு முழுவதிலும் உள்ள மக்களும் நிம்மதியாக வாழ்கின்றனர். ஜெனீவாப் பேச்சுக்கு முன் யுத்தப்பீதி காணப்பட்டது. இப்போது அது முற்றாக நீங்கிவிட்டது.

நிச்சயம் இந்த நாட்டில் தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் கண்டு சமாதானத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை இந்த ஜெனீவாப் பேச்சு எனக்கு அளித்துள்ளது. இந்த வாய்ப்பை நான் எந்த எதிர்ப்பு வந்தாலும் தவறவிடமாட்டேன்.

சமாதானத்தை விரும்பாத - பிற்போக்கு சிந்தனைகள் கொண்ட - சக்திகளே ஜெனீவாப் பேச்சையும் அதனுடன் தொடர்புபட்ட எனது சமாதான நகர்வுகளையும் எதிர்க்கின்றன. அதை நான் பெரிதுபடுத்தவில்லை.

இந்த நாட்டின் மூவின மக்கள் யுத்தபீதி நீங்கி - இன, மத பேதங்களைக் கடந்து - ஒன்றிணைந்து - நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழவேண்டும் என்பதே எனது ஒரே இலட்சியம். அதை நிறைவேற்றத் தொடர்ந்து பாடுபடுவேன்.

இதேவேளை, ஜெனீவாப் பேச்சு வெற்றியடைய உழைத்த அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது சமாதானப் பயணத்தை முன்னெடுத்துச் செல்லத் தொடர்ந்தும் அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றேன். - இவ்வாறு ஜனாதிபதி கூறினார். (ஐ-க)

SKY COMPUTER SYSTEMS.
sky
89A, Kandy Road, Jaffna.
Tel: 021 222 9109
E-Mail: skymathy@sltnet.lk
Pentium II 450MHZ With 17" Monitor - 18,750/-
Genuine intel Dealer
Pentium III
Pentium IV
* COMPUTER SALES
* COMPUTER REPAIR
* COMPUTER PARTS
* COMPUTER MAINTANACE
17" Monitor - 7,900/-
அனைத்துக் கணனிகளும் 1 வருட உத்தரவாதம்
நடமாடும் சேவை (MOBILE SERVICE)
(யாழ் கச்சேரிக்கு அருகில்)

SKY COMPUTERS (Pvt) Ltd.
sky
On Line Courses
Affiliated with Irish International University (U.K)
MS OFFICE XP 2 MONTHS 2000/=
DESK TOP PUBLISHING
HARDWARE TECHNOLOGY
COMPUTERIZED ACCOUNTING (ACCPAC, MYOB, Quick books)
KIDs PROGRAM
CERTIFICATE COURSES DURATION 1 MONTH
INTERNET & E-MAIL 2 WEEKS
MS-WORD
MS-EXCEL
MS-ACCESS
MS-POWER POINT
PHOTOSHOP 8.0
PAGEMAKER 7.0
CORELDRAW 12
(யாழ் கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead

கொழும்பு செல்லும் பயணிகளுக்கான அறிவித்தல்

• எதிர்வரும் 06-03-2006 தொடக்கம்
பெரிய பஸ் சேவை
ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆசனப் பதிவுகளை
மேற்கொள்ளும் பயணிகள்
கீழ்க்காணும் முகவரியில் பதிவுகளை
மேற்கொண்டு உங்கள் பயணங்களைத் தொடரலாம்.
தொடர்பு:
திறீ ஸ்ரார் ஹோட்டல்
இல.162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. NO: 222 7125, 222 3817, 077 3611282

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.